தமிழ் முரசு

ஆசிரியர். ம.பொ.சிவஞானம்.

1950 - நவம்பர்

விலை 4 அணா

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே!
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே!

தமிழ் முரசு

தொகுதி 5 : : சென்னை 1950-நவம்பர் : : பகுதி 7

காஷ்மீரிகளுக்கு சுயநிர்ணயம்

காஷ்மீரில், அண்மையில் கூடிய தேசிய மாநாடு ஒரு முக்கியமான தீர்மானத்தைச் செய்துள்ளது. "காஷ்மீரிலுள்ள வயதுவந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணய மன்றத்தார் கூடி, காஷ்மீரம் பாக்கிஸ்தானோடு சேருவதா, அல்லது பாரத நாட்டோடு சேருவதா என்பதை முடிவு செய்வார்கள்" என்பதே அத்தீர்மானம். பிரஸ்தாப தேசிய மாநாட்டில் பங்கு கொண்ட இந்தியப் பிரதமர் பண்டித நேருவும் தீர்மானத்தை வரவேற்றுப் பேசியிருக்கிறார்.

இந்தியாவிலுள்ள மொழிவழி நாடுகளில் காஷ்மீரமும் ஒன்று. இந்தியாவின் தென்கோடியிலுள்ள தமிழர்களுக்கும் மத்திய இந்தியாவிலுள்ள இந்திக்காரர்களுக்கும் மொழி-வரலாறு-பண்பாடு ஆகியவற்றால் எவ்வளவு வேற்றுமைகள் உண்டோ அவ்வளவு வேற்றுமைகள் காஷ்மீரிகளுக்கும் இதர இந்தியதேசிய இனங்களுக்கும் உண்டு. ஆகவே, காஷ்மீரிகள் ஒரு தனி தேசிய இனத்தவர் என்பதை எவரும் ஆட்சேபிக்க முடியாது.

இந்தக் கண்ணோட்டத்துடன்தான் காஷ்மீரிகளின் சுயநிர்ணயத்தை பண்டிதநேரு அங்கீகரித்துள்ளார். இதை நாமும் வரவேற்கிறோம்.

காஷ்மீர் தேசிய மாநாட்டினர், தங்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்குமாறு டில்லியிலுள்ள மத்திய அரசினருக்கு மனுப் போடவில்லை. சுயநிர்ணய உரிமை வழி தங்கள் தலைவிதியைத் தாங்களே நிர்ணயிக்கப் போவதாக பிரகடனம் செய்துள்ளனர். ஆகவே, இது இந்திய அரசிலிலேயே ஒரு புதிய பாதையை திறந்து

விடுகிறது. தமிழரின் சுயநிர்ணய விஷயத்தில் ஆதரவும், அக்கறையும் காட்டாத 'தினமணி' போன்ற சென்னை தேசியப் பத்திரிகைகள் கூட காஷ்மீர் தேசிய மாநாட்டின் முடிவை வரவேற்றுத் தலையங்கங்கள் எழுதியுள்ளன.

காஷ்மீரைப் பறித்துக் கொண்டு போக பாகிஸ்தான் திட்டமிட்டிருப்பதைத் தடுப்பதற்காகவும், ஐக்கிய நாடுகள் சபையின் ராஜீய சூழ்ச்சியிலிருந்து காஷ்மீர் பிரச்னையை விடுவிப்பதற்காகவும் இந்த முடிவு அவசியமாயிற்று என்று காங்கிரஸ் மேலிடத்தார் சமாதானம் கூறலாம். அதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனல், சுயநிர்ணயம் என்பது பிறர் கொடுத்துப் பெற வேண்டிய பிச்சைப் பொருளன்று. மொழிவழி தேசிய இனங்களுக்கு இயற்கையாகவே உள்ள பிறப்புரிமை என்பதை காஷ்மீர் முடிவு காட்டி விட்டது.

காஷ்மீரம் பெற்ற இந்த சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்காகவே பாக்கிஸ்தானில் உள்ள பட்டாணி இனத்தவர் போராடுகின்றனர். அவர்களின் சுதந்தரப் போராட்டம் சர்வதேசப் பிரச்னையாகவும் உருவெடுத்து வருகிறது. பட்டாணியர்களும் இதர பாக்கிஸ்தானியர்களைப் போலவே முஸ்லிம்களாயினும், மொழி, வரலாறு, பண்பாடு, மனப்பான்மை ஆகிய எல்லாவற்றிலும் சிந்தியர், பஞ்சாபியர் ஆகிய பிற தேசிய இனத்தவரிலிருந்து வேறுபட்ட தனி இனத்தவராவர். ஆகவே, அவர்கள் தங்கள் தாயகத்தைச் சுதந்திர நாடாக்கப் போராடுவது நியாயத்தையொட்டியதேயாகும்.

பட்டாணியர்களோ, அவர்களது ஒப்பற்ற தலைவரான கான் அப்துல் கபார்கானே, பட்டாணியர் நாடு பாக்கிஸ்தானிலிருந்து அடியோடு பிரிந்து விடவேண்டுமென்று கூறவில்லை. இணைந்து வாழவே விரும்புகின்றனர். ஆனல், மாகாணங்களின் விருப்பத்திற்கு மாருக, அவற்றின் உரிமைகளை எதேச்சாதிகாரமாகப் பறித்துக்கொண்ட பலம்வாய்ந்த மத்திய சர்க்காரையே ஆட்சேபிக்கின்றனர். பட்டாணியர்களின் உரிமைக்கிளர்ச்சியைப் பாக்கிஸ்தான் ஆட்சியினர் இன்று அங்கீகரியா விட்டாலும், என்றேனும் ஒருநாள் பட்டாணியர்களிடம் அடிபணிவது திண்ணம்.

ஆப்கானியர் ஆதரவுதரும் அளவுக்கு பட்டாணியர் கிளர்ச்சி வலுத்துவிட்ட பின்னரும், பாக்கிஸ்தான் அவர்கள் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவில்லை. பட்டாணியர்களின் தலைவர்களைச் சிறையிலிட்டு அவர்களைப் பின்பற்றும் வீரர்களைச் சுட்டுவீழ்த்துகிறது. இந்திய அரசாங்கமோ, இதற்கு நேர்மாருகக் காஷ்மீரிகள் செய்த சுயநிர்ணயப் பிரகடனத்தை நாள் பார்க்காமல், அரசியல் பஞ்சாங்கத்தை ஆராய்ச்சி செய்யாமல் ஒரு வார்த்தையிலேயே

அங்கீகரித்துவிட்டது. இச்செயல், இந்தியாவின் ஜனநாயகத் தன்மையை வெளிப்படுத்துகிறது.

இதிலிருந்து தமிழ் நாட்டாரும் ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும். காஷ்மீரம் இந்தியாவின் எல்லைப்பிரதேசம் பாக்கிஸ்தானை அடுத்துள்ள நாடு என்பதற்காக மட்டும் அதன் சுய நிர்ணய உரிமையை பண்டிதநேரு அங்கீகரித்து விடவில்லை.

"இந்தியாவின் எந்தப் பிரதேசமாயினும், தனித்திருக்க விரும்பினால் அதை நாங்கள் தடைசெய்யமாட்டோம்" என்று காங்கிரஸ் முன்பே தீர்மானித்திருக்கிறது. அத்தீர்மானப்படியே பண்டித நேரு காஷ்மீரின் சுயநிர்ணயத்தை அங்கீகரித்துள்ளனர்.

காஷ்மீர் இந்து மன்னரின் எதேச்சாதிகார ஆட்சியை எதிர்த்து சிறைபுகுந்தார் ஷேக் அப்துல்லா. அதே நேரத்தில், முஸ்லிம் லீகர்களின் இஸ்லாமிய வெறியையும் எதிர்த்துப் போரிட்டார். இப்படி இருமுனைகளிலும் போரிட்டுக் கொண்டே, மிக ராஜதந்திரத்திரத்துடன் காஷ்மீர் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டார். ஆகவே, இன்று காஷ்மீரில் ஷேக் அப்துல்லா இட்டது சட்டமாக இருக்கிறது. எதேச்சாதிக்காரப் போக்கில் அல்ல; மக்களின் இஷ்டத்தைச்சார்ந்த வழியில் இந்தியாவானாலும் சரி, பாக்கிஸ்தானானாலும் சரி; ஷேக் அப்துல்லாவை வீழ்த்திவிட்டு காஷ்மீரைக் கைப்பற்றுவது எளிதல்ல.

காஷ்மீரில் மதவெறியர்களுக்கு எதிராக தேசிய உணர்ச்சியை வளர்த்துவிட்டார் ஷேக் அப்துல்லா. ஆகவே, காஷ்மீரிகளின் தேசிய உணர்ச்சி, இஸ்லாமிய நாடான பாக்கிஸ்தானோடு சேருவதற்குச் சாதகமாக இல்லை. என்றாலும், இந்தியாவின் அடிமை மாகாணமாக இருககவும் காஷ்மீரிகள் விரும்பவில்லை. சுயநிர்ணய உரிமைப்படி காஷ்மீரை ஒரு சுதந்திரப் பிரதேசமாக செய்வதே தேசிய மாநாட்டினர் நோக்கம். இதை இன்று நேற்றல்ல. ஆரம்ப முதலே பல்வேறு சமயங்களில் காஷ்மீரிகளின் தலைவரான அப்துல்லா வெளியிட்டு வந்திருக்கிறார்.

காஷ்மீரில் அமைக்கப்பட விருக்கும் அரசியல் நிர்ணய மன்றம், காஷ்மீரை இந்தியாவோடு சேர்ப்பதற்கு சாதகமாகவே தீர்ப்பு செய்யுமென்று நம்பலாம். அதுமட்டுமல்ல; ஒரு சில அதிகாரங்களை மட்டும் டில்லி அரசாங்கத்திற்கு அளித்துவிட்டு, மிச்ச அதிகாரங்களுடன் கூடிய ஒரு சுதந்திரப் பிரதேசமாக காஷ்மீரைச் செய்துவிடும் என்பதும் நமது நம்பிக்கை. இந்த நிலையை டில்லி அரசினரும் வரவேற்றே தீருவார்கள்.

பாதுகாப்பு, வெளிநாட்டு அரசியல், போக்குவரத்து ஆகிய விஷயங்களை மட்டும் மத்திய அரசுக்கு விட்டுக்கொடுத்து மிச்ச

அதிகாரங்களுடன் கூடிய சுதந்தர நாடாக தமிழகம் விளங்க வேண்டுமென்பது தமிழரசுக் கழகத்தாரின் கொள்கை. தென் கோடியில் மூன்றாண்டுகளுக்கு முன்பு கழகத்தார் கொடுத்த குரல், வட கோடியான காஷ்மீரில் இன்று எதிரொலி செய்யக் கேட்கின்றோம். தமிழர்களாகிய நாமும், சாதி, மத, கட்சி வேற்றுமையின்றி ஒன்றுபட்டு முயலுவோமாயின், காஷ்மீரைப்போன்றே சுயநிர்ணயப் பிரகடனம் செய்வது சாத்தியமாகும். அப்போது டில்லி அரசாங்கமும் நமது பிரகடனத்தை ஆமோதித்தே தீரும். ஆட்சியைக் கைப்பற்றாமல், வெறும் பிரச்சாரத்தின் மூலமே அரசுரிமை அடைந்து விடலாம் என்று எண்ணுவோர், அப்துல்லா அடைந்த வெற்றியைப் பற்றி சிந்திப்பார்களாக!

'விடுதலை'யின் விபரீத புத்தி

கடந்த சில நாட்களாக சென்னை நகரில் உள்ள வடநாட்டார் கடைகள் முன்பு திராவிடக் கழகத்தார் மறியல் செய்கிறார்கள் அல்லவா? அதற்கு எதிராக, 'தமிழ் நாடு மாகாண வாலிபர் காங்கிரஸ் கமிட்டி' என்ற பெயரால் ஒரு துண்டுப் பிரசுரம், மறியலைக் காணும் மக்களிடையே விநியோகிக்கப்படுகிறதாம். பிரஸ்தாப பிரசுரத்தை வெளியிட்ட கமிட்டி நிர்வாகிகளின் பெயர்கள் பிரசுரத்தின் கீழ் தரப்பட்டிருக்கின்றன. அதில், 'உபத் தலைவர்' என்ற பட்டத்துடன் எனது பெயரும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பிரசுரம் உண்மையிலேயே வாலிபர் காங்கிரஸ் கமிட்டியாரால் வெளியிடப்பட்டதா? அல்லது எனது அரசியல் பகைவர்களால் சிருஷ்டிக்கப்பட்டதா என்பது விசாரணைக்குரிய விஷயமாக இருந்து வருகிறது. நேர்முகமாகவோ மறைமுகமாகவோ நான் சம்பந்தப்படாத ஒரு பிரசுரத்தை சாதகமாகக் கொண்டு, 'விடுதலை' 26-10-50 இதழில் "கிராமணியார்" என்ற தலைப்பில் உபதலையங்கம் எழுதப்பட்டுள்ளது.

தனக்கே உரிய 'திராவிட பாஷை'யில் "பார்ப்பன அடிமை" "பனியாவின் அடிமை" என்ற பட்டங்களைக் கைம்மாறு கருதாமலே எனக்கு வழங்கியிருக்கிறது 'விடுதலை'. என்ன பெருந்தன்மை! அறிவும் திறனும் நாணயமும் நல்லெண்ணமும் இல்லாவிட்டாலும் என்னைப் பேச்சாளனாக் சிலர் ஆக்கிவிட்டு விட்டார்கள் என்று அங்கலாய்க்கிறது 'விடுதலை'. இது 'விடுதலை'க் கூட்டத்தாரின் அனுபவமாக இருக்கலாம். ஆனால், எனது அரசியல் வாழ்வின் வரலாறல்ல.

"என்னை எதிர்க்காதவர்களெல்லாம் எனது அனுதாபிகள்" என்பது ராஜ தந்திரம். ஆனால், 'என்னோடு வாராதவர்கள் எல்லாம் எனது விரோதிகள்' என்கிறது 'விடுதலை'யின் 'புத்திசாலித்தனம்!'. வடநாட்டவர் கடை முன்பு 'விடுதலை'க் கூட்டத்தார்.

மறியல் செய்வதை எதிர்த்து நான் எழுதியதுமில்லை; பேசியது மில்லை. இந்த நிலையில், என் பெயரால் ஒரு பிரசுரம் வெளி வருமா யின், அதை எனக்கு அனுப்பி உண்மையை அறிய வேண்டியது ஆசிரியப் பண்பு மட்டுமல்ல; ஒரு தமிழனிடம் இன்னொரு தமிழன் (தொலையட்டும்; ஒரு 'திராவிடனி'டம் இன்னொரு 'திரா விடன்') நடந்து கொள்ள வேண்டிய நாணயமுமாகும். ஆனால், 'விடுதலை'யார் அப்படிச் செய்யவில்லை. கிடைத்த சந்தர்ப்பத்தை சாதகமாகக் கொண்டு தன் வசைச்சொற் களஞ்சியத்திலிருந்து கேவலச் சொற்களை வாரி வழங்கி விட்டார். அந்த வசை மொழி கட்கு இடையேயும்,

> "அந்த நோட்டீசை கிராமணியார் பார்க்க வேண்டும். அது அவர் சம்மதத்துடனே அறிவுடனே வெளியிடப்பட்டதாக இருக்காது."

என்றும் வற்புறுத்தி யிருக்கிறார் 'விடுதலை'யார். இது சட்டத்தி லிருந்து தப்பித்துக் கொள்வதற்கான சாகசம்! தனது மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதில் இருந்த இந்த எச்சரிக்கை பிறர் மானத் திற்கு மதிப்பளிப்பதிலும் இருந்திருக்க வேண்டியது நியாயம். அது தமிழ்ப் பண்புமாகும். ஆனால், 'விடுதலை'யார் திராவிடராத லால், பிறர் மானத்தைக் கெடுப்பதன் மூலம்தான் தனது மானத் தைக் காக்க முடியும் என்று நம்புகிறார் போலும்!

பிரஸ்தாப பிரசுரத்தில் எனது பெயர் சேர்க்கப்பட்டு இருந்த தால் 'விடுதலை'க் கூட்டத்தாருக்கு நிலைமை நெருக்கடியாகி யிருப்பின், அதைச் சமாளிப்பதற்கான நாணயமான வழி என் னிடமே மறுப்பு அறிக்கை வாங்கிப் பிரசுரிப்பதுதான். நான் கொடுக்க மறுத்திருப்பின் இருக்கவே இருக்கிறது 'விடுதலை'யின் வற்றாத வசைக் களஞ்சியம்! என்னைப்பற்றி, எனது அரசியல் ஒழுக்கத்தைப் பற்றி நானே அறிவேன்; தமிழகமும் அறியும். ஆகவே 'விடுதலை'யின் வசைமொழிகள் எனது பொது வாழ்வைக் களங்கப்படுத்த முடியாது. ஆனால், எனது சம்பந்தமில்லாத— எனது பண்புகட்கு மாறுபட்ட முறையில் எழுதப்பட்டுள்ள ஒரு பிரசுரத்தை என்னோடு சம்பந்தப்படுத்தி நான் வடநாட்டுச் சுரண் டலை ஆதரிப்பதாகப் பழி சுமத்த முயல்வது எனது வாழ்விற்குக் 'களங்கம்' கற்பிப்பதுதான். இதை 'விடுதலை'யார் மறுத்தாலும் ஒழுக்கத்தில் நம்பிக்கை யுடையோர் ஒப்புக்கொள்வர்.

ஒரு கட்சியாரைப் பற்றி இன்னொரு கட்சியார் குணதோஷம் கூறுவது குற்றமல்ல; ஜனநாயக நெறி. அதன்படி வடநாட்டார் கடைகள்முன் 'விடுதலை'க் கூட்டத்தார் மறியல் செய்வதைப்பற்றிக் கண்டிக்க எதிர் கட்சியாருக்கு உரிமை உண்டு. அப்படி எழும் கண்டனத்திற்கு அரசியல் ரீதியில் பதில் அளிக்க வேண்டுமே ஒழிய வசை பாடுவது அறிவுடைமையல்ல; அரசியற் பண்புமல்ல.

அப்படியானால், நானும் 'விடுதலை'க்கூட்டத்தாரைப் பற்றிச் சொல்வதற்கு எவ்வளவோ உண்டு. 'மாதிரி'க்குச் சில தருகின்றேன்:

உத்தமர் காந்தியடிகள், திலகர் பெயரால் நிதி திரட்டிய போது, (காலணாகூட கொடுக்காதவர்கள்—கொடுத்தவர்களையும் தடுத்தவர்கள்) அதற்குக் கணக்குக் காட்டும்படி கூட்டந்தோறும் கூச்சல்போட்டனர் திராவிடக் கழகத்தார். ஆனால், கழகத்தின் பெயரால் தான் திரட்டிய நிதிக்கு கழகத்தோழர்களே கணக்குக் கேட்டால் காட்ட மறுத்தது கழகத் தலைமை. இதுதான் திராவிட கழகத்தாரின் 'நாணயம்' என்று நையாண்டி செய்யலாம்.

தமிழ், தெலுங்கு, மலையாள, கன்னட 'மொழிகள் பேசுவோர் அனைவரும திராவிட இனத்தவர் என்று இலக்கணம் கூறுகிறார்கள். ஆனால், 'திராவிட நாட்டிற்கு எல்லை எது?' என்றால், 'திராவிடம்' அல்லாத மராட்டிய நாட்டிற்கு அப்பாலுள்ள விந்திய மலையைக் காட்டுகிறார்கள்! இது, 'விடுதலை'க் கூட்டத்தாரின் 'பூகோள அறிவு' என்று கேலி செய்யலாம்.

இந்திய விடுதலைப் போரின் எதிரொலியாக மக்களிடையே வளர்ந்துள்ள தமிழ்ப்பற்றைப் பயன்படுத்திக் கொண்டு இந்தியை எதிர்க்கின்றனர். அதே நேரத்தில் 'தமிழுக்குரிய இடத்தில் ஆங்கிலத்தை வைத்தால் வரவேற்கத் தயார்' என்கிறது தலைமைப் பீடம்! இது, இந்தி எதிர்ப்பாளரின் 'தமிழ்த் தொண்டு' என்று முரசடிக்கலாம்.

"இன்பத் திராவிடத்தை அடைந்திடுவோம், சேர வாரும் திராவிடர்காள்!" என இசை முழக்குகின்றனர். ஆனால், திராவிட'த்திலுள்ள மொழிவழி நாடுகளின் எல்லைகள் யாவை? இன அரசுகளை அமைக்கும் வகை யாது? திராவிடத்தின் பொது மொழி யாது? என்று கேட்டால், கேட்பவனை வட நாட்டாரின் அடிமை எனக் கூறி வசைபாடுகின்றனர். இது திராவிட கழகத்தாரின் "அரசியல் மேதாவித்தனம்" என்று கூறலாம்.

நடத்துவதோ பகுத்தறிவு இயக்கம்; தலைவர் விரும்புவதோ சிந்திக்கத் தெரியாத சிந்திக்கவும் விரும்பாத முட்டாள்கள் கூட்டம். இது, திராவிடக் கழகத்தவரின் 'அறிவுத் தொண்டு' என்று குத்திக் காட்டலாம்.

இத்தனை 'அருமை' 'பெருமை'களை யுடைய வட்டாரத்தில் உலவும் 'விடுதலை', எனது அறிவு—ஆற்றல்—நாணயம்—நல்லெண்

ணம் ஆகியவற்றைப் பற்றி ஆராயப் புகுந்தது எனக்கு நகைப்பைத் தருகிறது. "கண்ணாடி வீட்டுக்காரன், கல் வீட்டின் மீது கல்லெறியு முன் அதே கல் திருப்பி விடப்பட்டால் தன் வீடு என்னாகும் என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டும்" என்பது தமிழகத்துப் பழமொழி. இதற்கிணங்க 'விடுதலை'யார் என்னைப் பற்றி எழுது முன் தமது கொள்கையின் 'மேன்மை'யை, நடைமுறையின் 'தூய்மை'யை, ஒழுக்கத்தின் 'உயர்வை', நாணயத்தின் பெருமையை அறிந்தே இருக்க வேண்டும் (சிந்தனைச் சிற்பிகளை உற்பத்தியாக்கும் உலைக்களம் அல்லவா ?).

வடநாட்டவர் தமிழ்நாட்டில் வாணிபத்தின் மூலம் சுரண்டுகிறார்கள் என்பது விடுதலைக் கூட்டத்தார் சொல்லித் தெரிய வேண்டிய விஷயம் அல்ல, நான் அறிவேன். வடநாட்டவரைப் போலவே தமிழ்நாட்டுச் செல்வர்களும் சிங்களவரைச் சுரண்டுவதாக, பர்மியர் சொத்தைச் சூறையாடுவதாக, அந்தந்த நாட்டு மக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர். வட இந்தியர்கள் வாணிபத்துறையில் தென்னாட்டில் ஆதிக்கம் செலுத்துவதைப் போலவே தென்னிந்தியப் படிப்பாளிகள் வட இந்திய மாகாணங்களிலும், மத்திய அரசாங்கத்திலும் குமாஸ்தா பதவி முதல் பெரிய உத்தியோகம் வரை ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்று அங்குள்ளோர் குற்றம் சாட்டுகிறார்கள்.

இன்னும் தமிழ்நாட்டு தொழில் முதலாளிகளும், பாங்கர்களும் ஆந்திர நாட்டைச் சுரண்டுவதாக ஆந்திரர்கள் கூக்குரலிடுகின்றனர். அது காரணமாகப் பிரிவினையும் வேண்டுகின்றனர்.

இதெல்லாம் 'விடுதலை'யாரும் அவர் கூட்டத்தாரும் அறியாதது அல்ல. சுரண்டப்படும் தன்மையில் - அளவில் ஏற்றத்தாழ்வு இருக்கலாம். ஆனால் சுரண்டல் கொடுமை - ஆதிக்கம் செலுத்தும் புத்தி அங்கு இங்கு எனாதபடி எங்கும் தாண்டவமாடக் காண்கிறோம். இதற்குப் பரிகாரம் தேடுவதில் விடுதலையாருக்குள்ள அக்கரை - அவசரம் - எனக்கும் உண்டு - ஏன்? - நாட்டின் நலத்தை நாடும் எல்லோருக்கும் உண்டு. ஆனால், காணப்படும் பரிகாரம் எல்லாச் சுரண்டலையும் ஒழிக்கக் கூடியதாகவும் - எல்லா இனத்தாராலும்வரவேற்கக் கூடியதாகவும் ஆன பொதுப் பரிகாரமாக இருக்கவேண்டும். அந்தப் பரிகாரம் என்ன என்பதை 'விடுதலை'யாருக்கு பலமுறை நினைப்பூட்டியிருக்கிறேன். மீண்டும் நினைப்பூட்டுகிறேன். அது மொழிவாரி மாகாணங்களைப் பிரித்து அந்த மாகாணங்கள் தத்தம் அரசியலைத் தாமே வகுக்கும் உரிமை அளித்து விருப்பத்தின் மீது மத்திய அரசில் சேரும் வகையில் சோஷியலிச அடிப்படையில் இந்திய அரசியலைத் திருத்தி அமைப்பதேயாகும். இத்தகைய ஒரு தெளிவான திட்டவட்டமான கோரிக்கையைப் பின்னணியாகக் கொள்ளாத எந்த நடவடிக்கையையும் நான் மட்டுமல்ல - முற்போக்கு அரசியல்

கொள்கையுடைய எந்தத் தமிழரும் ஆதரிக்க மாட்டார்கள். முற்போக்காளரின் ஆதரவு பெருத எந்த நடவடிக்கையும் இரண்டொரு வார ஆரவாரத்தோடு முடிந்துவிட வேண்டியதுதான். அப்படி முடிந்த எத்தனையோ நடவடிக்கைகளைத் தமிழ் மக்கள் கண்டிருக்கிறார்கள்.

தேசிய வீரர்கள் அந்நியத் துணிக்கடைகளை மறியல் செய்த போது ஆட்சேபித்தவர்கள்—அந்த மறியலை அடக்குமுறையால் ஒடுக்கிவிட முயன்ற ஆங்கில சாம்ராஜ்யத்தை ஆதரித்தவர்கள் திராவிடக் கழகத்தார். அன்று ஆங்கிலேயரின் சுரண்டலுக்கு - ஆதரவு காட்டியவர்கள் இன்று வடநாட்டவரின் கடைகளை மறியல் செய்வதென்றுல், அதை சுதந்திரப் பிரியர்கள் சந்தேகப் பார்வையுடன்தான் நோக்குவார்கள். இது முன்வினையின் பயன்!

மேலும், "விடுதலை" யாரின் பழைய ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால் அதில், 'மறியல்' என்ற சொல்லுக்கு, '**தனிப்பட்டவர்களின் உரிமையைப் பறிக்கும் சண்டித்தனம்**' என்று விளக்கம் தரப்பட்டிருக்கும். எந்த செல்லாராம் கடையை இன்று திராவிடக் கழகத்தார் மறியல் செய்கிறுர்களோ, அதே செல்லாராம் கடையை நானும் ஏனைய சுதந்திர வீரர்களும் 'சத்தியாக்கிரகம்' என்ற பெயரால் மறியல் செய்தபொழுது அதற்கு சண்டித்தனம் எனப்பெயர் கொடுத்துக் கண்டித்தது 'விடுதலை'க் கூட்டம். சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா? என்ற தலைப்பில் இவர்கள் அக்காலத்தில் வெளியிட்ட பிரசுரங்களை நாம் மறக்கவில்லை. அன்று சண்டித்தனமாக இருந்த ஒரு செய்கை இன்று எப்படி சன்மார்க்க நெறியாக, தன்மானப் புரட்சியாக மாறிவிட்டதோ தெரியவில்லை. போகட்டும்; 'விடுதலை' யாரின் பழைய பஞ்சாங்கத்தை ஆராயவும், இன்று தொடங்கி நாளை முடியும் 'புரட்சி'களை எதிர்த்துப் போரிடவும் அவசியமோ அவசரமோ ஏற்படவில்லை.

இறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்: 'விடுதலை'க் கூட்டத்தாரின் கொள்கையை அல்லது நடைமுறைச் செயல்களை எதிர்க்கவேண்டிய அவசியம் நேர்ந்து விடத்தும் வெளிப்படையாகவே — எனது பெயராலேயே எதிர்க்கும் ஆற்றலும் ஆண்மையும் எனக்குண்டு. மறைமுகமாகவோ, அல்லது பிறந்த நேரமே எது வென்று தெரியாத ஒரு ஸ்தாபனத்தின் பெயராலோ துண்டுப் பிரசுரம் வெளியிட வேண்டிய அவசியம் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

—ம. பொ. சி.

அன்னதானம் அவசியமா?

★

[இன்றைய உலகில் அன்னதானம் அவசியமா? அவசியமானால் எந்த வகையில்? என்பன பற்றி 18—10—50 இரவு 7-45-க்கு சென்னை வானொலியில் திரு. டி. எஸ் நடராச பிள்ளைக்கும், திரு. ம. பொ. சிவ ஞானத்திற்கும் நடந்த விவாதம்]

டி. எஸ். நடராசப் பிள்ளை :—வாருங்கள், சிவஞான கிராமணி யாரே! நாம் இருவரும் இப்போது அன்னதானத்தைப் பற்றி விவாதிக்கப் போகிறோம்.

ம. பொ. சிவஞானம் :—நல்லது. காலத்துக்கு ஏற்ற விஷயந் தான். சோற்றுப் பஞ்சம் மிகுந்துள்ள இந்தக் காலத்திலே அன்ன தானக் கொள்கையை யார்தான் ஆட்சேபிப்பார்கள்.

நட :—உலகத்திலே மக்கள் எல்லோரும் ஒரு படித்தாய் செல்வம் படைத்தவர்கள் அல்லர்; சிலர் செல்வச் சீமான்களாக வும், மற்றும் பலர் வறியர்களாகவும் இருக்கக் காண்கிறோம். விதி வசத்தால் ஏழைகளாக இருக்கும் மக்களுடைய பசியைத் தீர்த் தலே இல்வாழ்வானுடைய முக்கிய வேலையாக எண்ணப்பட்டது. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று மணி மேகலையும் கூறுகிறது. ஆகையால், அன்னதானத்திற்குத் தனிச் சிறப்பு கொடுக்கப்பட்டது.

ம.பொ.சி. :—பிள்ளையவர்களே! சமூகத்தில் பலர் ஏழைகளாக இருப்பதற்குக் காரணம் விதியன்று; சமூக அமைப்பிலுள்ள விபரீதமே யாகும். சிலரைச் செல்வராக இருக்க அனுமதித்ததே பலர் வறிஞராகி வருந்தக் காரணமாயிற்று. செல்வர், வறியர் என்ற ஏற்றத் தாழ்வுகளைப் போக்கி விட்டால், அன்னதானத்தை வற் புறுத்த வேண்டிய அவசியமே இல்லையல்லவா? 'கொள்வாரு மில்லை, கொடுப்பாருமில்லை' என்பதன்றோ கம்பர் கண்ட லட்சிய நாடு.

நட :—"வண்மையில்லை யோர் வறுமையின்மையால்" என்று கம்பர் சொன்னது எந்த யுகத்தில்? இந்த நூற்றாண்டிலே நாம் என்ன காணக்கிடக்கிறதோ அதை வைத்துக்கொண்டுதானே வறுமைக்குப் பரிகாரம் தேட வேண்டும். முன்னாளில் இந்தியர் கள் ஆடம்பரமில்லாத எளிய வாழ்க்கையை விரும்பினார்கள். அவர்களுக்கு வேண்டியவை ,எல்லாம் நாழி அரிசியும் நான்கு முழத் துண்டும்தான். இவற்றை அடைவது அவர்களுக்கு எளிதா கவும் இருந்தது. அதனால் செல்வந் தேடுவதைவிட்டு முத்தியடை யும் வழியைத் தேடினார்கள். அப்படி முத்தி அடைவதற்குச்

கருவியாக இருப்பது தர்மம். அந்தத் தர்மங்களில் தலை சிறந்தது அன்னதானம். ஆகவே, அதைப் பெரிதாகக் கொண்டாடினார்கள்.

ம.பொ.சி. :—உண்மை; பசித்தவனுக்கு அன்னம் ஈந்தால் பரலோகம் சித்திக்கும் என்பதற்காகவும் சிலர் அன்னதானம் செய்தார்கள் இடைக்காலத்திலே! இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் இந்த அறநிலை வாணிபத்தை சமூக விதியாக்கிவிடக்கூடாது நண்பரே! இதனால் வறுமை சிரஞ்சீவி வரம் பெற்று விடும்.

நட :—அப்படியானால், அன்னதானமே கூடாதென்பது தங்கள் கொள்கையா?

ம.பொ.சி. :—பொறுங்கள் நண்பரே! அன்னதானம் என்று சொல்லும்போது சரியான விளக்கம் வேண்டும் என்றுதான் கூறுகின்றேன். பண்டை நாளில் அன்னதானம் யாருக்குச் செய்தார்கள்? கண்ணற்ற குருடர்களுக்கு, காலோ கையோ அற்ற முடவர்களுக்கு, உழைத்துப் பிழைக்கச் சக்தியற்ற வயோதிகர்களுககு, செந்நெறி பரப்புவதையே தங்கள் தொழிலாகக்கொண்ட நன்னெறியாளர்களுக்கு அன்னம் வழங்கி ஆதரித்தார்கள். ஆனால் இந்த நாளில், அன்னதானம் என்ற பெயரால் சோம்பேறி வாழ்வுக்கு உற்சாகமளிக்கப்படுகிறது. கை உழைத்துப் பிழைக்க விரும்பாத சோம்பேறி காஷாயம் கட்டி விட்டால் அன்னம் கிடைக்கிறது. உடலில் பலமிருந்தும் உழைக்க மனமில்லாதவன் "சம்போ சிவ சம்போ" எனச் சத்தம் போட்டால் சாப்பாடு கிடைத்துவிடுகிறது. எனவே, அன்னதானக் கொள்கை அங்கவீனர்களுக்கு மட்டும் பயன் படுவதாகவும் சோம்பேறிகளின் எண்ணிக்கையை அதிகரிக்காததாகவும் இருக்க வேண்டும்.

நட :—ஆமாம். நீங்கள் சொல்வது உண்மையே. இதை அறிந்தே நம் முன்னோர்கள் "பாத்திரம் அறிந்து பிச்சை இடு" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையால், கட்டுறுதியுள்ள உடலை வைத்துக்கொண்டு பாடுபட மனமில்லாதவனுக்கும் ஊட்டுப் புறைகளில் உண்டு தெருத் திண்ணைகளில் உட்கார்ந்து பிறரைப் பழித்து ஏளனம் செய்து சிரிக்கும் மக்களுக்கும் அன்னதானம் செய்தல் அறியா மாக்கள் செய்கையாகும்.

ம.பொ.சி. :—சோறு போடும் கொள்கையால் சோம்பேறித் தனத்தை வளர்க்கக்கூடாது என்பதை ஒப்புக்கொண்டால் மட்டும் போதுமா? இன்று நாட்டில் அதுதானே பெரும்பாலும் நடைமுறையில் இருக்கிறது. இந்த ரேஷன் காலத்தில்கூட கோயில் திருவிழாக்கள், குரு பூஜை வைபவங்கள், நாயன்மார்களின் நட்சத்திர நாட்கள், செத்தவர்களின் சிரார்த்தங்கள் ஆகியவைகளிலெல்லாம் அன்னதானம் குறைந்த அளவிலேனும் நடந்து

கொண்டுதான் இருக்கிறது; சோம்பேறிகளும் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள். இதற்குப் பரிகாரம் தேட வேண்டாமா? பரிகாரம் நிரந்தமானதாகவும், அங்கவீனர்கள் அத்தனை பேருக்கும் பயன்படுவதாகவும் இருக்க வேண்டாமா?

நட:—ஆம். அப்படிப்பட்ட பரிகாரங்களில் ஒன்று அன்ன தான சமாஜம் போன்ற பொது நிலையங்களை ஏற்படுத்தல். அவைகள் தாங்கள் சொன்னதுபோல கூன், குருடு, முடம் ஆகிய தாமே உழைத்துண்ண இயலாதவர்களுக்கு உணவளிக்கும். இது ஏற்பாடான ஒரு தர்மமாகும். இதற்கென்று நிதி வழங்குவோர் குறித்த ஒரே நோக்கத்தில் ஈடுபட்டவராய் வாழ்வர். இதன் மூலம் சாதி, மத பேதம் என்னும் கண்மூடி வழக்கங்கள் மண் மூடிப் போய் சகோதரத்துவம் ஏற்படும். நோய் வாய்ப் பட்டவரும் ஏழையரும் சமூக மக்கள் தங்களைப் புறக்கணிக்காமல், தங்கள் மேல் இரக்கங் காட்டுகிறார்கள் என்று மகிழ்ந்து பணக்காரர் களிடத்தில் கொள்ளும் பகைமையை ஒழிப்பர்.

ம. பொ. சி:—பணக்காரர்கள் மீது ஏழைகள் கொண்டுள்ள பகையை ஒழிக்க இது பரிகாரமாகாது. என்றாலும், தாங்கள் கூறும் பரிகாரம் பசிக்கொடுமை ஒன்றையேனும் குறைக்கும். ஸ்தாபன ரீதியாக அன்னதானம் நடத்துவது நல்லதுதான். ஆனால், அந்த ஸ்தாபனத்தை யார் அமைப்பது? எப்படி நடத்துவது என்பது நிர்ணயிக்கப்பட வேண்டும். இக்காலப் பணக்காரர்கள் பண்டை நாட் செல்வர்களைப் போன்று தானம் போன்ற துறைகளில் செலவழிப்பதில்லை. மேலும், பண்டை நாளில் அன்னதானம் தாராளமாக நடைபெறுவதற்கு அக்கால பண்டமாற்று முறையும் காரணமாக இருந்தது. ஒரு பண்டத்தைக் கொடுத்து இன்னொரு பண்டத்தை வாங்கினர்; பண்டத்தைப் பணத்துக்கு மாற்றும் வழக்கம் இல்லாததால் சேமித்து வைக்கவேண்டுமென்ற சிறுமதியுமில்லை. ஆகவே, அன்னதானம் தலை சிறந்த அறமாகக் கருதப்பட்டது. ஆனால், பண்டத்தைப் பணத்துக்கு மாற்றத் துவங்கிய பிற்காலத்தில் அன்னதானம் மட்டுமல்ல; எல்லா தானங்களும் சுருங்கி விட்டன; வயிறு காய்ந்தவன் வானம் பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகவே, அங்கவீனர்களுக்கு அன்னதானம் அவசியம் என்ற கொள்கை அங்கீகரிக்கப்படுமிடத்து அதற்கு நிரந்தரமான சாதனங்கள் அமைத்தாக வேண்டும்.

நட:—அப்படிப்பட்ட சாதனங்கள் இப்பொழுது நடைமுறையில் இருந்துகொண்டிருக்கின்றன. மேலும் குழந்தைபிறந்ததுமுதல் மனிதன் இறந்து சுடுகாடு போகும் வரையில் மக்களுக்கு குழந்தைகள் பராமரிப்பு சங்கம் முதற்கொண்டு இடுகாட்டு வசதி வரையில் எல்லாம் அரசாங்கமே செய்துவைக்க வேண்டுமென்ற கொள்கை இப்பொழுது மாறி வருகிறது. பல இடங்களில் தனிப்பட்ட நபர்களே ஒன்று சேர்ந்து அன்னதான சமாஜம் முதலிய குழுக்களை

ஏற்படுத்தி அவற்றைச் சரிவர நடத்தி வருகின்றார்களே. அதுவுமல்லாமல், சிற்சில கைத்தொழில்களையும் அந்த அன்னதான சபாஜங்களில் ஏற்படுத்தி அவற்றையும் ஒழுங்காக நடத்தி வருகிறார்கள். பண்டத்தை விற்று நாணயமாக மாற்றி சேர்த்து வைப்பது சமூக நன்மைக்கு விரோதமானதேயானாலும், உதார குணமுடையவர்கள் பண்டத்திற்கு பதிலாகப் பணத்தை வழங்க வேண்டும். "செத்தும் கொடுத்தான் சீதக்காதி" என்னும் பழமொழி வழங்கும் நாட்டில் இது ஒரு கடினமாயிராது என்று நம்புகிறேன்.

ம. பொ. சி :—தாங்கள் அங்கவீனர்களுக்கு உணவளித்துக் காப்பது ரசாங்கத்தின் கடமை என்கிறீர்களா, அல்லது அது தனிப்பட்டவர்களின் பொறுப்பு என்கிறீர்களா? கொஞ்சம் தெளிவாகக் கூறுங்கள்.

நட :—அரசாங்கம்தான் நடத்தவேண்டுமென்றோ, தனிப்பட்ட நபர்கள்ால் அமைக்கப்படும் சமாஜங்கள்தான் நடத்த வேண்டுமென்றோ இதில் வரையறுக்க முடியாது. இடத்துக்கேற்பவும் நிலைமைக்கேற்பவும் இரு தரப்பாரும் சேர்ந்தோ தனித்தனியாகவோ நடத்தலாம்.

ம. பொ. சி :—அன்பரே! இது குழப்பமான போக்கு; கொள்கை நிறைவேறாத வழி. சமூகத்தில் ஒவ்வொரு பிரஜையின் வாழ்வுக்கும் பொறுப்பேற்க வேண்டிய கடமை அரசாங்கத்தினுடையதேயன்றி, தனிப்பட்ட நபர்களுடையதன்று. அங்கவீனர்களை ஆதரிப்பதில் தனிப்பட்டவர்கள் அக்கறை காட்டலாம். அதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், அவர்களைக்காப்பதற்கான முழுப் பொறுப்பும் அரசாங்கம்தான் ஏற்க வேண்டும். இங்கும் அங்குமாக இரண்டொரு 'சீதக்காதி'களின் தானங்களுக்கோ, சபாஜங்களின் உபகாரங்களுக்கோ அங்கவீனர்கள் 'க்யூ' முறைப்படி அணிவகுத்து நிற்க முடியாது; நிற்கவும் கூடாது. உழைத்துப் பிழைக்க சக்தியற்ற மக்களில் ஒருவர்கூட, ஒரு வேளை கூட உணவின்றி வருந்தாமல் வாழ உத்திரவாதம் வேண்டும்.

நட :—அரசாங்கத்தால் ஒரு சில காரியங்களையே செய்ய முடியும். எல்லாப் பொறுப்பையும் அரசாங்கமே தாங்குவது என்றால் அது இயலாத காரியம். நம் நாட்டில் பல ஆண்டுகளாக இம்மாதிரியான கொள்கையே நிலவி வருகின்றது. வைத்தியசாலை போன்ற பல அறநிலையங்களை ஆங்கில நாட்டில் அரசாங்கம் மட்டும் நிறுவி நிர்வகிக்கவில்லை. தனிப்பட்ட நபர்களும் சங்கங்களும் அவற்றை ஏற்படுத்தி பராமரிக்கின்றன. ஆகையால், எல்லாம் வல்ல ஒரு அரசாங்கம் இந்த அன்னதானத்தை நாங்களே செய்து முடிப்போம் என்று முன் வந்தாலும்—தனிப்பட்ட நபர்களுடையவும் சங்கங்களுடையவும் முயற்சி அவசியமானதென்று எனக்குத் தோன்றுகிறது.

ம.பொ.சி.:—அரசாங்கம் பொறுப்பேற்று நடத்தும்போதுதான் அங்கவீனர்கள் அத்தனை பேருக்கும் உணவு கிடைக்கும் என்ற உத்தரவாதம் ஏற்படுத்த முடியும். தனிப்பட்டவர்கள் அரசாங்கத்துக்குப் பண உதவி புரியலாம். உதாரணமாக எடுத்துக்கொள்வோம்: முடவர்கள் விடுதி, குருடர்கள் விடுதி, வயோதிகர்கள் விடுதி, காப்பாரற்றுக் கைவிடப்பட்ட விதவைகள் விடுதி ஆகியவற்றை அரசாங்கம் ஆரம்பித்து நடத்தும் போது அவற்றின் நிர்வாக செலவுக்கு தனிப்பட்ட செல்வந்தர்கள் பண உதவி புரியலாம். அரசாங்கம் வேறு, மக்கள் வேறு என்ற காலம் மலையேறி விட்டது. இப்பொழுது நடப்பது மக்கள் அரசாங்கம். ஆகவே, அகதிகளுக்கு அன்னமளிக்கும் விஷயத்திலும் அரசாங்கமும் மக்களும் பரஸ்பரம் ஒத்துழைத்துக் கொள்வது இயல்புதானே.

நட:—அன்னதானத்தை விட்டு வெகுதூரம் செல்கிறோம். மக்கள் இல்லாத அரசாங்கம் ஏது? ஆனால், அரசாங்கம் தவிர நகராண்மைக் கழகம் போன்ற பல ஸ்தாபனங்களும் அன்னதானத்தில் உதவி செய்யக்கூடும். தற்காலத்தில் நமது சென்னை நகராண்மைக் கழகமும் இதில் ஈடுபட்டிருக்கிறது. ஜில்லா போர்டுகளும் இந்த வேலையை மேற்கொள்ளுமானால் அன்னதானம் செவ்வனே நடப்பதுடன் அது மக்களுக்கும் பயனளிக்கும்.

ம.பொ.சி:—பிள்ளையவர்களே! 'அன்னதானம்' என்ற சொல்லே இந்தக் காலத்தில் தவறான அர்த்தத்தைக் கொடுத்துவிடுகிறது தனிப்பட்டவர்கள் அன்னம் போட்டால், அது கருணையால் செய்யப்படும் தானதாகக் கருதப்படுகிறது. ஆனால் அரசாங்கமோ, ஸ்தல ஸ்தாபனங்களோ விடுதிகள் அமைத்து அன்னமளித்தால் அது கடமையைச் செய்வதாகுமே ஒழிய, தானமளிப்பதாகவோ முத்திக்கு இடந்தேடுவதாகவோ ஆகாது. மேலும், பண்டைநாளில் தனிப்பட்டவர்களால் நடத்தப்பட்டு வந்த அன்னதானம் இப்பொழுது கூட்டுறவு முறையில் சமாஜங்களாலும் ஸ்தல ஸ்தாபனங்களாலும் நடத்தப்படுவது உண்மைதான். ஆனால், ஏதோ நாங்களும் நடத்துகிறோம் என்ற ஆத்ம திருப்திக்காக இங்குமங்குமாக இரண்டொரு இடங்களில் நடத்தப்படுகிறதே யொழிய, சோறு தேடி வாடும் அங்கவீனர்கள் அத்தனை பேருக்கும் சோறு போடப்படுவதாகச் சொல்ல முடியாது பாதை ஓரத்திலே பதறியழும் முடவர்களை நாம் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறோம்; கண்ணற்ற கபோதி, கையில் தடி ஊன்றி இல்லந்தோறும் இரந்து வரும் கொடுமை இன்றளவும் இருந்துதானே வருகிறது. ஆகவே, அங்கவீனர்களும் ஆதரிப்பாரற்ற பிள்ளைகளும் பூரணமாக ஆதரவு பெறும் அளவுக்கு அன்னமளிக்கும் கொள்கை விஸ்தரிக்கப்பட வேண்டும். அது அரசாங்கத்தாரால்தான் முடியும்.

நட:—எந்த யுகத்தை எடுத்துக்கொண்டாலும், மக்களுள் அளவும் ஏழைகளும் இருந்துகொண்டுதான் இருப்பார்கள்.

'குபேரப்பட்டணத்தில் கோவணாண்டி இருப்பானா?' என்று கேள்வி கேட்கின்றார்களே ஒழிய, 'இல்லை' என்று நிச்சயமாய் எவரும் சொல்வதில்லை. நீங்கள் சொல்கிறபடி ஓர் புது உலக நிலைமை ஏற்படுவதானால், சமூக அமைப்பும் அரசாங்க அமைப்புமே மாற வேண்டும். இப்போதிருக்கும் அரசாங்கத்தினால் இது முடியுமென்றும் அப்படி முடிவதற்கு வழிகளும் இருக்கின்றன வென்றும் நீங்கள் நம்புகின்றீர்களா?

ம.பொ.சி. :—ஏன் முடியாது? ஆனால், குபேரர்களும் கோவணாண்டிகளும் இருப்பது விதியின் விளைவு என்று நினைக்கும் வரை முடியாதுதான். அது சமூகத்தில் ஏற்பட்ட ஒரு விபத்து என்று நினைக்கின்ற பொழுது நிச்சயமாக முடியும். இன்றுள்ள சமூகத்தை மாற்றி அமைத்துத்தான் தீரவேண்டும். ஆனால் இப்பொழுது நாம் எடுத்துக்கொண்ட விஷயம், சமூகத்தை மாற்றி அமைப்பதன்று; இன்றைய சமூகத்தில் உழைத்து வாழத்திறனற்ற மக்களுக்கு உணவளித்துக் காப்பது எப்படி என்பதேயாகும். அதற்கு வழி வகைகள் இல்லாமல் இல்லை மடங்களிலும் கோயில்களிலும் இன்னபிற அறநிலையங்களிலும் தேங்கிக் கிடக்கும் சொத்துக்களை இந்த வழிக்குத் திருப்பி விட்டால் போதுமே! ஏன்? இதற்காகவும்தான் அவை ஏற்படுத்தப் பட்டன.

நட :—ம. பொ. சி. அவர்களே! நீங்கள் சொல்வதை நானும் முழுமனத்துடன் ஆதரிக்கிறேன். தற்சமயம் அரசாங்கம் இதைக் கருத்தாகக்கொண்ட ஒரு மசோதாவை சட்டசபையில் கொண்டு வந்திருப்பது நீங்கள் அறிந்ததே. இதற்கு எதிரிடையாய் நிற்கின்றவர் எத்தனை பேர்! நமது சமயங்கள் கெட்டுப்போகின்றன என்றும் கொள்கைகள் மாறிவிடுகின்றன என்றும் பல கூக்குரல்கள் எங்கும் கிளம்பியிருக்கின்றன. என்றாலும், இந்த நிதிகளை எல்லாம் ஆட்சியின் நிர்வாகத்திற்காக செலவழிக்கப்படாமல் பொது ஜனநன்மைக்காகவும் உணவு ஊட்டுதலுக்காகவும் செலவழிக்கப்பட்டால் எதிர்ப்பு குறைந்துவிடுமென்று நான் எண்ணுகிறேன்.

ம.பொ.சி. :—ஆம். அதைத்தான் நானும் சொல்லுகிறேன் அறநிலையச் சொத்துக்களை அரசாங்கத்தார் தங்கள் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருகின்றபொழுது, அந்த நிலையங்கள் எந்த அறங்களுக்காக ஏற்படுத்தப்பட்டனவோ அதை நிறைவேற்ற வேண்டியது தானே அரசாங்கத்தின் பொறுப்பு. ஆகவே, மடங்களின் பொருள்களையோ ஆலயத்தின் உரிமைகளையோ அரசாங்கம் மேற்கொள்ளும்போது, அவற்றைக்கொண்டு நலிந்தார்க்கு உணவு, உடை தந்து உதவுவதுதான் முறை; அப்படித்தான் நடக்கும் என்று நம்புகிறேன்.



டாக்டர். மு. வரதராசனார்

அன்புள்ள எழில்!

"என் கேள்விகள் கிறுக்குப் பிடித்த கேள்விகள் அல்ல; வேண்டும் என்றே கேட்கும் குறுக்குக் கேள்விகள் அல்ல. என் நெஞ்சில் தெளிவு ஏற்படுத்திக் கொள்வதற்காக, நன்கு அறிய வேண்டும் என்ற உண்மை ஆர்வத்தால் கேட்கிறேன்" என்று நீ எழுதியதை நான் மிகவும் பாராட்டுகிறேன். உன் கேள்விகளையும் ஐயங்களையும் படித்து நான் இதற்கு முன்னும் வெறுப்பு அடைந்ததில்லை. இப்போதும் வெறுப்புக் கொள்ளவில்லை என் தம்பியின் உள்ளம் எனக்குத் தெரியாதா? அன்னைக்கு நீ எழுதிய கடிதங்களில் உன்னுடைய நாட்டுப்பற்று, மொழிப்பற்று, பரந்த நோக்கம் மூன்றையும் ஒருங்கே கண்டு நான் பூரிப்பு அடைந்தேன் அல்லவா?

இந்தக் கடிதத்தில் நீ கேட்டுள்ள கேள்வி உனக்கு தெளிவு வேண்டும் என்ற காரணத்தால் எழுதியிருக்கமாட்டாய். உன்னை அணுகிக் கேட்பவர்களுக்கு விடை சொல்ல வேண்டும் என்று எண்ணியே என்னைக் கேட்கிறாய். அதுதானே?

எனக்கும் தெரியும். என்னை அதுபோல் பலர் கேட்கிறார்கள். என்ன செய்வது? பத்திரிகைகளும் கட்சிகளும் செய்யும் விளம்பரங்களும் பிரசாரங்களும் மலிந்துள்ள உலகம் இது. பெரும்பாலோர்க்குச் சொந்தமாகக் கண் இல்லை; பத்திரிகைகளும் கட்சிகளும் காட்டுவதையே மெய் என்று காண்கிறார்கள். பெரும்பாலோர்க்குச் சொந்தமாகக் காது இல்லை; பத்திரிகைகளும் கட்சிகளும் சொல்வதையே உண்மை என்று கேட்டு நம்புகிறார்கள். பலர்க்குச் சொந்த மூளையும் இல்லாமற் போய்விட்டது: பத்திரிகைகளும் கட்சிகளும் எண்ணச் செய்கிறபடியே கண் மூடிக்கொண்டு எண்ணுகிறார்கள். யந்திர நூற்றாண்டு இது. மக்களும் யந்திரங்களாக மாறி விட்டார்களோ?

"மொழிவாரி மாகாணம் பற்றிப் பேசுவது குறுகிய நோக்கத்தையே காட்டும்; அது நாட்டின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டையாகும் என்று சொல்பவர்களை எப்படித் திருத்துவது?" என்று எழுதியிருக்கிறாய். 'அப்படிச் சொல்பவர்கள் எத்தனை பேர்? படித்தவர்கள் பலர் அப்படிப் பேசுவது போல் தெரியும். உண்மை அது அல்ல. படித்தவர்களிலும் யந்திரங்களாக இருப்பவர்களே மிகுதி; 'அரசி

யல் தலைவர்கள் ஒரு சிலர் ஏதோ காரணம் பற்றித் தன்னல நோக்கத்தோடு சொல்லும் கருத்தையே இந்தப் படித்த யந்திரங்கள் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கும். அதைப்பற்றி நீ கவலைப்படாதே. வானொலியில் வீடுதோறும் ஒரு கருத்து பேசப்படலாம். ஆனால் ஒவ்வொரு வீட்டாரும் அதையே பேசுகிறார்கள் என்று சொல்ல முடியுமா? சென்னையிலிருந்தோ திருச்சியிலிருந்தோ வானொலி நிலையத்தில் ஒருவர் தான் பேசுகிறார். வீடுதோறும் உள்ள வானொலிப் பெட்டிகள் அந்தப் பேச்சை அப்படியே ஒலிக்கின்றன. அதுபோலவே, அரசியல் தலைவரோ கட்சிப் பத்திரிகையோ மொழிவாரி மாகாணம் நாட்டுக்குத் தீமை செய்யும் என்று ஒரு முறை அறிவிக்கலாம். பத்திரிகை படிக்கும் மூளைகள் திரும்பத் திரும்ப அதையே பேசிக்கொண்டிருக்கும். அவ்வளவே நடப்பது. மெய் பொய்யாகிவிடும். பொய் மெய்யாகிவிடும். எல்லாம் பிரசார வல்லமையால் நடக்கும். ஹிட்லர் இந்தத் தந்திரத்தைத் தெரிந்துகொண்டே பொய்யை மெய்போல் முழக்கச் செய்தான்; எல்லா வகையாலும் விளம்பரப் படுத்தச் செய்தான். ஆனாலும் உண்மை நெடுநாள் மறைந்திருக்காது; போலித் தன்மை ஒரு நாள் வெளிப்பட்டே தீரும். அதுவரையில் தான் நம்மைப் போன்றவர்களுக்குத் தொல்லை. பொறுத்திருந்து கடமையைச் செய்வோம். ஹிட்லர்கள் எப்படியும் மாண்டு மறைவார்கள்.

தம்பி! நினைத்தால் வயிறு எரிகிறது. எது நடக்கவேண்டுமோ அதைப்பற்றி யாரும் எள்ளளவும் கவலைப்படவில்லை. எது நடக்காதோ, அதை நடத்தியே தீரவேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள்! அதுதான் சரி என்று பலரும் நம்பச் செய்கிறார்கள்!

சாதி ஒரு பொய்; சாதி வேறுபாடு பொய்யின் அடிப்படையில் நிற்பது. அதனால்தான் அறிவு வளர வளர, நாகரிகம் வளர வளர, சாதி இருக்குமிடம் தெரியாமல் மறைகிறது. அப்படிப்பட்ட பொய்யான வேறுபாட்டைச் சட்டத்தால் அரை நாளில் மாய்த்து விடலாம். சமய வேறுபாடும் அப்படிப்பட்டதே. அதுவும் பொய்யின் அடிப்படையில் எழுந்த கட்டிடமே. நான் சொல்வது சடங்குச் சமயத்தைப் பற்றியே அல்லாமல், கொள்கைச் சமயத்தைப் பற்றி அல்ல. கொள்கைச் சமயத்தைப் பற்றி நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேருக்குத் தெரியாது. பொதுமக்களுக்குத் தெரிந்ததெல்லாம் சடங்குச் சமயமே. அதற்கும் உண்மைச் சமயத்திற்கும் மிகத் தொலைவு. சமய உண்மையை உணர்ந்தவர்களுக்குச் சடங்குகளில் பற்றும் இல்லை; சமய வேறுபாடும் அவர்களுக்குத் தெரியாது. "கடவுள் எனக்குக் கட்டளை இட்டார்; ஆகையால் இந்துக்களைக் கொல்கிறேன்" என்று ஓடும் ரயிலில் நின்று கத்தியை உருவுகின்றவனுக்கும் உண்மையான இஸ்லாமிய மதத்திற்கும் ஏதாவது தொடர்பு உண்டா? "இன்று கனவில் வந்து மாரி

யாயி ஆட்டுக்கடா பலி கேட்டாள்; ஆகையால் இந்த ஆட்டை வெட்டப் போகிறேன்'' என்று அந்த ஆட்டுக்கு மாலை சூட்டுகிறவனுக்கும் இந்து மதத்திற்கும் ஏதாவது தொடர்பு உண்டா? இவ்வளவு பொய்யும் போலியுமாக இருக்கும் சாதி சமய வேறுபாட்டை ஒழிக்க முயற்சி உண்டா? உயர்ந்த சாதியான், தாழ்ந்த சாதியான், சேரி மக்கள், ஊர் மக்கள், இந்த மதத்தான், அந்த மதத்தான் என்று இந்த வேறுபாடுகளைப் பேச இடம் தரலாமா? இவற்றைப் பள்ளிக்கூடம் முதல் தொழிற்சாலை வரையில் பதிவு செய்ய இடம் தரலாமா? மக்கள் தொகைக் கணக்கில் (சென்ஸஸ் கணக்கில்) இவற்றை அதிகாரிகள் கேட்கவும் மக்கள் கூறவும் குறிக்கவும் இடம் தரலாமா? இந்த மக்களுக்குள் இரத்தம், தசை நார், நரம்பு முதலிய எந்த வகையாலும் உடம்பில் வேறுபாடு இல்லை. உடல் நூல் **(Physiology)** ஒரு வேறுபாடும் இல்லை என்று உறுதிப்படுத்துகிறது. இருந்தும், போலி வேறுபாடுகள் நாட்டில் வளர்ந்து வருவது பெரிய கேடு அல்லவா? இந்த வேறுபாடுகள் குறுகிய நோக்கம் அல்லவா? நாட்டு ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டை அல்லவா? மொழிவாரி மாகாணம் ஒன்றுதான் குறுகிய நோக்கமா? முட்டுக் கட்டையா?

சாதி வேறுபாட்டை ஒழிக்க ஆற்றல் இல்லை; சமய வேறுபாட்டை ஒழிக்க முயற்சி இல்லை. ஆற்றலும் பெருமல் முயற்சியும் செய்யாமல் காலம் கடத்திய பாவந்தான், பாகிஸ்தான் கலகங்களையும் குழப்பங்களையும் வளர்த்து விட்டது; பல்லாயிரக் கணக்கான உயிர்க் கொலைக்கும் காரணமாய் விட்டது; இன்னும் அமைதிக்கு ஊறு விளைத்து வருகிறது.

இந்தப் பொய் வேறுபாட்டை ஒழிக்கும் முயற்சி இல்லை. ஆனல் மொழிவேறுபாடு மெய்யான வேறுபாடு. அதை இல்லை என்று மறைக்க முயல்கிறர்கள். முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் செயல் அல்லவா இது? இதைத்தான் செய்ய வேண்டுமாம். இல்லையானல் குறுகிய நோக்கமாம்; முட்டுக் கட்டையாம்.

மொழி மனிதனுடைய உடலில் ஊருததாக இருக்கலாம்; ஆனல் அவனுடைய மூளையை உருவாக்கியது அதுவே. அவன் எண்ணும் எண்ணம், பேசும் பேச்சு, எழுதும் எழுத்து மூன்றிலும் மொழி உள்ளது; அதன் செல்வாக்கு உள்ளது. மொழி வேறுபாடு குழந்தையின் தொட்டிலிலேயே தொடங்குவது; மரணப்படுக்கை வரையில் அழியாமல் வருவது. இடையில் மனிதன் கற்ற எத்தனையோ பழக்க வழக்கங்கள் மாறிவிடுகின்றன; ஆனல் மொழியின் செல்வாக்கு மாறுவதில்லை. பரம்பரையாக ஆசிரியத் தொழிலில் இருந்தவன் துப்பாக்கி ஏந்துந் தொழிலுக்குச் செல்கிறன்; செருப்புத் தொழில் செய்தவன் நாட்டை ஆள்கிறன்; பரம்பரையாகத் தராசு பிடித்தவன் விமானம் ஓட்டுகிறன்; பரம்பரை

யாக வர் ஓட்டியவன் நூல் எழுதுகிறன்; ஆனல் மொழி மாறுவதில்லை. பரம்பரையாகக் குடித்து மயங்கிப் புலால் மணம் கமழ்ந்த குடும்பத்துப் பெர்னர்ட் ஷா குடியை அறவே வெறுத்து மரக்கறி உணவு உண்டு வாழ்கிறர். வழிவழியாக வைதிகமாக இருந்த குடும்பத்துப் பண்டித நேரு இருபதாம் நூற்றண்டுப் புதுப்புதுப் பழக்க வழக்கங்களில் மூழ்கி விடுகிறர். தலைவர் நேரு செல்லும் நாடுகளுக்கு ஏற்றபடியெல்லாம் நடையுடைகளை மாற்றிக் கொள்கிறர். இமயமலைச் சாரலில் வாழும் பழங்குடி மக்களுடன் பழகும்போது, அவர்களைப் போலவே உடுத்துக் கொள்கிறர்; சென்னை மக்களுடன் பழகும்போது கீழ்ப் பாய்ச்சுக் கட்டிக் கொள்கிறர்; இங்கிலாந்தில் கால் வைக்கு முன்பே ஆங்கில உடையில் விளங்குகிறர்; மற்றப் பழக்க வழக்கங்களையும் மாற்றிக் கொள்கிறர். ஆனல், மொழியின் தொடர்பு அவரைவிட்டதா? லண்டன் பாராளுமன்றத்தில் பேசும்போது முதலில் பத்து நிமிஷம் தம் தாய்மொழியில்தான் பேசுகிறர். தாகூரையும் காந்தியடிகளையும் விட உலக ஒற்றுமையை நாடியவர் ஒருவர் உண்டா? ஆனல் அவர்களை விடத் தாய்மொழிப் பற்றுக் கொண்டவர்களும் இல்லை அல்லவா? இந்த அறிஞர்களை விட்டு நீங்காத மொழிப்பற்று, தமிழரைமட்டும் விட்டு நீங்கவேண்டும் என்று சொல்வது தகுமா? சொன்னல், சொல்கிறவர்களின் மூளையில் நஞ்சு கரந்து கிடக்கிறது என்றே உணரவேண்டும்.

அஸாம் மாகாணத் தலைவர் ராய் சௌதரி தம் மாகாணத்தில் மாகாண மொழியை அரசாங்க மொழியாகச் செய்து முடித்தபோது, ஒருநாள் குறிப்பிட்டு, அதைக் குறித்து மாகாண முழுதும் திருவிழாக் கொண்டாடும்படியாகச் செய்தார். ஆனல், தமிழ்நாட்டில் அப்படிச் செய்யக்கூடிய வாய்ப்பு ஒரு தமிழ்த் தலைவருக்கு ஏற்படுவதாக வைத்துக் கொள் அவர் இவ்வளவு மகிழ்ச்சியோடு விழாக் கொண்டாட ஏற்பாடு செய்வாரா? ஏதோ பெரிய தவறு செய்துவிட்டதாகத் தமக்குள் எண்ணிக் கொண்டு, யார் என்ன சொல்வார்களோ என்று அஞ்சிக் கொண்டு, முக்காடு இட்டு மூலையில் இருக்க முயல்வாரோ, என்னவோ!

பரந்த நோக்கம் வேண்டியதுதான்; ஆனல் அதற்காகத் தாய் வயிற்றிற்கும் தாய்மொழிக்கும் தாய்நாட்டுக்கும் செய்யவேண்டிய கடமையை மறப்பது குற்றம் அல்லவா? நான் உண்மையாகச் சொல்கிறேன். உலக ஒற்றுமைக்கு மொழிப்பற்று ஒரு தடையாக இருக்குமானல், அந்த நாளில் தமிழர் தமிழை மறக்கவும் தயங்க மாட்டார்கள். ஆனல் அதற்குத் தமிழ் மொழி தடையாக இருக்கிறதா? அல்லது இந்தியாவின் முன்னேற்றத்திற்காவது தடையாக உள்ளதா? மொழிப்பற்றும், அதனல் ஏற்படும் மொழிவாரி மாகாண அமைப்பும் தடையாகவும் இடையூருகவும் இருக்கும் என்று அஞ்சுவதற்கு முன்னே, சிறிதளவு எண்ணிப் பார்க்க

வேண்டாமா? இன்று உள்ள சாதிவேறுபாடும் சமய வேறுபாடும் செய்துவரும் இடையூறுகளைப் போக்க முடியாத நாம், இல்லாத ஒன்றைக் குறித்து எண்ணி ஏங்குவதால் பயன் என்ன?

இன்று உள்ள முதல் கடமை வேறு. அதைச் செய்தால் போதும். அதைச் செய்து முடித்தபிறகு, மொழிவேறுபாடு அற்ற இந்தியா அல்லது உலகம் தேவையானால் அமைத்துக்கொள்வோம். அப்போது வேண்டுமானால் மொழிப்பற்றையும் மாகாணப்பற்றையும் விட்டு விடுவோம். முதலில் இன்று உள்ள இழிநிலையை - வெட்கப்படத்தக்க நிலையை மாற்ற வேண்டும் அல்லவா?

இழிநிலை என்ன? இந்தியாவின் பூகோளப் படத்தையும் ஐரோப்பா முதலானவற்றின் பூகோளப் படத்தையும் ஒத்திட்டுப் பார்த்தால் இந்த இழிநிலை தெரியும். ஜெர்மன் மொழி - ஜெர்மன் நாடு, பிரெஞ்சு மொழி - பிரெஞ்சு நாடு, இங்கிலீஷ் - இங்கிலாந்து, ஸ்காட்ச் மொழி - ஸ்காட்லாந்து, சீன மொழி - சீனு, ஜப்பான் மொழி - ஜப்பான், பர்மிய மொழி-பர்மா என்று இவ்வாறே ஏறக்குறைய எல்லா நாடுகளின் பிரிவினையும் காணலாம். இந்தப் பிரிவினையில் போலியும் பொய்யும் இல்லை; சமயமும் சாதியும் இல்லை. உண்மையான மொழிவேறுபாடும் அதனல் வளர்ந்த எல்லைச் சுவர்களையும் காண்கிறேம். வெட்கப்படத்தக்க மாசு என்றுமே இந்தப் பிரிவினைகளில் இல்லை.

ஆனல் இந்தியாவில்—? போலிக்கும் பொய்க்கும் இடம் உண்டு. உண்மைக்கு இடம் இல்லை. சாதியும் சமயமும் இங்கே தெருவுகளைப் பிரிக்கலாம்; சேரியும் ஊரும் என்று ஊர்களைப் பிரிக்கலாம்; கிழக்கு வங்காளம் மேற்கு வங்காளம் என்று மாகாணங்களையும் பிரிக்கலாம்; பாரதம் பாகிஸ்தானம் என்று நாட்டையும் பிரிக்கலாம். சாதி சமயப் போலிப் பேய்களுக்கு இவ்வளவு செல்வாக்கு! ஆனல் மொழி, என்னும் தெய்வத்தாய் கண்திறந்து பார்க்கக்கூடாதாம்; மொழிவாரி மாகாணம் என்னும் பேச்சே கூடாதாம்! புலியும் கரடியும் திரியலாம்; நாயும் நரியும் ஊளையிடலாம்; பசு மட்டும் வாலாட்டக்கூடாதாம்! எது கடமை, தம்பி! ஏன் செய்யவில்லை, தம்பி!

அன்புள்ள,
வளவன்.

தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் 'தமிழ் முரசு' விற்பனையாளர்கள் தேவை. டிபாசிட் கட்டக் கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்க.

மதுரை
சேலம்
கோயமுத்தூர்

விவரங்களுக்கு
நிர்வாகி
'தமிழ் முரசு'

வீரபாண்டியன் நினைவு நாள்

நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு இந்திய சுதந்தரப் போரைத் துவக்கி வைத்து, அப் போரில் முதற் பலியான மன்னன் வீரபாண்டியக் கட்டபொம்மன். இரண்டாவது முறையாக அம்மாவீரனின் திருவிழா கடந்த 16—10—50-ல் சென்னை அரசாங்க மாளிகையிலுள்ள காங்கிரஸ் சட்டசபைக் கட்சி அலுவலகத்தில் கொண்டாடப்பட்டது. தமிழரசுக் கழகத்தின் ஆதரவில் நிறுவப்பட்ட **கட்டபொம்மன் நினைவுக் குழுவினர்** விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தனர். காலையிலிருந்தே விடாது மழை பெய்து கொண்டிருந்தும் ஏராளமான மக்கள் விழாவில் பங்கு கொண்டனர். வீரவணக்கம் செய்யும் பண்பு தமிழகத்தில் மறுமலர்ச்சி பெற்று விட்டது என்பதற்கு அன்றைய விழாவில் மக்கள் காட்டிய ஆர்வம் சரியான சான்றாக இருந்தது.

அம்பத்தூர் திரு. அ. வை. கிருஷ்ணமூர்த்தி வந்திருந்த மக்களை வரவேற்றும், கூட்டத் தலைவரைப் பிரேரேபித்தும் பேசினார்.

பன்மொழிப் புலவர் தலைமையுரை

பன்மொழிப் புலவர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"இன்று நாம் உரிமைபெற்று விட்டோம் என்று மகிழ்கின்றோம். உரிமைப்போரைத் தமிழ் நாட்டில் துவக்கி வைத்தவன் திருநாளைக் கொண்டாடவே கூடியிருக்கிறோம்.

கேளிக்கைகளிலும், கூத்திலும் பொழுதை உல்லாசமாகக் கழித்து வந்த பாளையக்காரர்கள் வம்சத்தில் - ஆந்திர நாட்டிலிருந்து வந்த பரம்பரையில் தோன்றியவன்தான் கட்டபொம்மன். ஆனால், இந்நாளைய ஆந்திர சகோதரர்களைப் போன்றல்லாது, தமிழ் நாட்டுக்கு வந்த பின்னர் தமிழனாகி விட்டான். அவன் உடம்பில் தமிழ் ரத்தம் ஓடிற்று. அதனால்தான் பாண்டிய வம்சத்தின் வாரிசாக வர முடிந்தது. தமிழன், பழைமையின் பெருமையை, வீரத்தின் உயர்வை மறந்தவனல்லன். பால் மணம் மாறாப் பாலகனைப் போருக்கனுப்பிய வீரத்தமிழ்த் தாயின் மரபில் உதித்தவன். மார்பில் காயத்துடன் மாண்டு கிடந்த பாலகனைக்கண்டு, பெற்ற நாளிலும் பேருவகை கொண்ட தாயின் வீரம்தான் தமிழ்நாட்டைக் காத்துவந்திருக்கிறது என்பதைக் கட்டபொம்மன் மறந்தானில்லை.

கிழக்கிந்தியக் கம்பெனி தமிழ் நாட்டை அடிமை கொண்டது. குறுநில மன்னனான கட்டபொம்மன் கொதித்தெழுந்து, கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வரி கொடுக்க மறுத்துக் கிளர்ச்சி செய்தான். நாட்டில் எங்கும் புரட்சிக் கனல்

வீசிற்று. கட்டபொம்மனை அடிமைப்படுத்த கம்பெனி வெள்ளையர்கள் முயன்றனர்; முடியவில்லை. அப்பொழுதுதான் தமிழரை - தமிழினத்தைத் தலைகுனிய வைத்தார்கள் ஒரு சில தமிழர்கள். வீரன் தோன்றிய நாட்டில் துரோகிகளும் தோன்றுவதா?

இனிமேலாவது காட்டிக் கொடுப்பவர்கள் தமிழ் நாட்டில் தோன்றக்கூடாதென்பதற்காகவே, இன்று நாம் இந்த விழாவைக் கொண்டாடுகிறோம். எந்த இனத்தின் சுதந்தரத்துக்காக கட்டபொம்மன் தூக்குமேடை ஏறினானோ, அந்தத் தமிழ் இனத்தின் வாழ்க்கையை மலர வைக்க வேண்டியது நம் பொறுப்பு. தமிழ் நாட்டின் பொருள் செல்வத்தையும், இயற்கைச் செல்வத்தையும் பெருக்க வேண்டும். உட்பகை, பொறாமை ஆகிய குறுகிய மனப்பான்மைகளை ஒழித்துக் கட்டி, தமிழ் சமுதாயத்தைச் செப்பனிடுவதில் நாம் ஈடுபட வேண்டும்."

திரு. ந. சஞ்சீவி

அடுத்தபடியாக, காஞ்சீபுரம் பச்சையப்பன் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் திரு ந. சஞ்சீவி பி. ஓ. எல். (ஆனர்ஸ்) பேசுகையில், இந்திய விடுதலைப் போரைத் துவக்கிவைத்த தனிப் பெருமை தமிழனைச் சேர்ந்த தென்றும், அப்போரைத் துவக்கிவைத்த வீரபாண்டியனுக்கு நினைவுச் சின்னமாக நமது வாழ்க்கையே அமைய வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

திரு. டி. கே. சண்முகம்

பின்னர் 'முதல் முழக்கம்' என்ற கட்டபொம்மன் நாடகத்தில் ஊமைத்துரை வேடந்தாங்கி உணர்ச்சி ததும்ப நடித்துப் புகழ்பெற்ற திரு. டி. கே. சண்முகம், 'முதல் முழக்கம்' நாடகத்தை யொட்டிய தமது அனுபவங்களை விளக்கிவிட்டு, கட்டபொம்மன்மீது திரு. கு. மா. பாலசுப்ரமணியம் இயற்றிய பாடல் ஒன்றை கேட்போர் உள்ளங்களை உருக்கும் வகையில் பாடினார். (அந்தப் பாடல் பிறிதோர் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.)

திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி

அடுத்தபடியாக "கல்கி" ஆசிரியர் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி பேசினார். அவர் குறிப்பிட்டதாவது :—

ஒரு நாட்டில் வீரபாண்டியனைப் போன்ற மாவீரர்கள் பல ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் தோன்றுவார்கள். அப்பேர்ப்பட்ட வீரர்களையும், மகான்களையும் அறிந்து போற்றும் அறிவாவது ஒரு இனத்திற்கு இருந்தால் தான் அந்த இனம் வளர்ச்சியும் முன்னேற்றமும் அடைய முடியும். இந்திய அரசாங்கம் தயாரித்து வரும் விடுதலை வரலாற்றை சிப்பாய்ப் புரட்சியிலிருந்து ஆரம்பிக்காமல், கட்டபொம்மன் காலத்திலிருந்து துவக்க வேண்டும். கட்டபொம்மன் திருநாளை நாடு முழுவதும் - இமயம் முதல் குமரி வரையிலும் கொண்டாட ஏற்பாடு செய்யவேண்டும்.

திரு. கொ. மோ. ஜனார்த்தனம்

பின்னர் திரு. கொ. மோ. ஜனார்த்தனம் பேசுகையில், விடுதலைப் போராட்டத்தின் முதல் தளபதியான கட்டபொம்மனது பெயரை நமது போர்ப் படையின் ஒரு பிரிவுக்காவது வைக்க வேண்டுமென்றும், அவனது புகழ் நாடு முழுவதும் பரப்ப தமிழர்கள் பணிபுரிய வேண்டுமென்றும், எந்த முறையில் எதிர்ப்பு வந்தாலும், அதை அஞ்சாது, மனம் குன்றாது, நிலை குலையாது, அறிவோடு, அறநெறியோடு எதிர்த்துத் தகர்த்தெறிவதே தமிழரின் மரபு, பண்பு என்பதைக் கட்டபொம்மன் எடுத்துக் காட்டினான் என்றும் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது :—

கட்டபொம்மன், வீரச் சிதம்பரம் போன்ற மாவீரர்களின் வரலாற்றை அகழ்ந்தெடுத்து, அதற்கு அழகும் தந்து தமிழ் மக்களுக்கும், சிறார்களுக்கும் அறிமுகப்படுத்தும் அரிய தொண்டில் ஈடுபட்டுள்ள ம. பொ. சி., 'தமிழ் நாட்டு வீரர்களின் பாஸ்வல்' (Boswell) ஆவார் என்று குறிப்பிட்டார்.

திரு. கே. காமராசர்

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் திரு. கே. காமராசர், வீரபாண்டியக் கட்டபொம்மனின் அழகிய வர்ணப் படம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசியதாவது :—

கட்டபொம்மனைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தால் உந்தப்பட்டே இங்கு வந்தேன். எனக்கு முன்னே பேசியவர்களெல்லாம் கட்டபொம்மனின் வீரச் செயல்களை நமக்கு விளக்கி யிருக்கிறார்கள். நாம் அந்த வீரனைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. வெறும் உற்சாகத்தால் கரகோஷங்கள் செய்வதாலும், மகிழ்ச்சி மிகுதியால் சிரிப்பதாலும் கட்டபொம்மனுக்கு வணக்கம் செலுத்திவிட முடியாது. அவனைப் போன்று நாம் வீரர்கள் ஆவதற்கு முயல வேண்டும். வெறும் பேச்சுக்களால் மட்டும் பயனில்லை. நாம் ஒவ்வொருவரும் காரியத்தில் கண்ணுயிருக்க வேண்டும். இவையே கட்டபொம்மன் வரலாற்றிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியவை.''

ராஜாஜி—ராஜா செய்திகள்

விழா வெற்றிகரமாக நடைபெற வேண்டுமென்று வாழ்த்தி வந்திருந்த செய்திகளை திரு. ம. பொ. சிவஞானம் வாசித்தார்.

''கட்டபொம்மன் விழாவுக்கு என் மனமார்ந்த ஆசிகள். நம் தமிழர், தம் பெருமையை அறிந்து, பெருந்தன்மை வழிகளில் நடக்க எண்ணம், பேச்சு, செயல் இவை எல்லாவற்றையும் பழக்குவதில் என்னை விட யாருக்கு மகிழ்ச்சி தரும்'' என்று ராஜாஜி அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

சென்னை அரசாங்க முதல் அமைச்சர் திரு. பி. எஸ். குமாரசாமி ராஜா அனுப்பியிருந்த செய்தியில் குறிப்பிட்டிருந்ததாவது :—

"நம் நாட்டின் அடிமைத் தனத்தை ஒழிக்க முயன்ற வீரர்களில் கட்டபொம்மன்தான் முதல்வன் என்று கூறலாம். அவனுடைய வீரச் செயல்கள் எல்லோராலும், எக்காலத்திலும் நினைக்கக் கூடியவை. தேச பக்தியைத் தளரவிடாது நினைவூட்டும் கட்டபொம்மனது வரலாற்றைப் பரப்புவதும், அந்த வீரனுக்கு விழாக் கொண்டாடுவதும் பாராட்டத் தக்கவை."

மற்றும், தமிழ் நாட்டிலுள்ள எல்லா தமிழரசுக் கழகக் கிளைக் கழகங்களும், பல ஸ்தாபனங்களும், அறிஞர்களும் விழா வெற்றி பெற வேண்டுமென்று வாழ்த்தி செய்திகள் அனுப்பியிருந்தனர்.

திரு. ம. பொ. சி. பேச்சு

இறுதியாக, ம. பொ. சிவஞானம் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"வீரபாண்டியன் மறைந்து 151 ஆண்டுகளான பிறகு இப்போதுதான் அப்பெரு வீரனுக்கு விழாக் கொண்டாட முனைந்துள்ளோம். இவ்வளவு நீண்டகாலம் உறங்கிய பின்னர் இப்பொழுதேனும் விழித்துக் கொண்டோமே என்பதை நினைத்து மகிழ்ச்சியடைகிறேன்!

நாம் கொண்டாடும் தேசிய விழாக்களிலேயே, காலத்தால் முற்பட்டது கட்டபொம்மன் விழாவாகும். ஏனைய தேசிய விழாக்களுக்குரிய சம்பவங்களெல்லாம் பாஞ்சைப் புரட்சிக்குப் பின்னே நிகழ்ந்தவைதான். வீரபாண்டியன் முடிசூடி ஆண்ட மன்னன்; காந்தியடிகள் முடிசூடா மன்னர். வீரபாண்டியன் இந்திய விடுதலைப் போரைத் துவக்கி வைத்து உயிர் நீத்தான். காந்தியடிகள் அப்போரை முடித்து விட்டுக் கண் மூடினார். இந்த இருபெரும் தியாகிகளின் நினைவு நாட்கள் அக்டோபர் மாதத்திலேயே அமைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். ஆங்கிலேயர்கள், வீரபாண்டியனின் ஆயுத பலத்தை முறியடித்து வெற்றி கண்டனர். ஆனால், காந்தியடிகளின் ஆத்மபலத்தை வெற்றி காணமுடியாது வீழ்ச்சியுற்றனர். ஆயுத சக்தியைவிட, ஆத்ம சக்தி எத்தனை பெரிய சாம்ராஜ்யத்தையும் வென்றுவிடும் என்பதற்குச் சான்றாக விளங்கினார் மகாத்மா. கட்டபொம்மனும் காந்தியடிகளும் தேச பக்தியிலும், தியாக புத்தியிலும் சமதையான வீரர்களாவர்.

வீரபாண்டியனின் வீழ்ச்சிக்குக் காரணம் வெள்ளையர்கள் மட்டும் அல்லர். புதுக்கோட்டை, எட்டையாபுரம் மன்னர்களும் காரணமாவர். ஆனால், வீரபாண்டியனின் விழாவைக் கொண்டாடும் போது, ஆங்கில சாதிக்கெதிராக வெறியை வளர்க்க நான் விரும்பாதது போலவே, எட்டையாபுரம், புதுக்

கோட்டை மன்னர்களுடைய சந்ததியார்களின் மீது வெறுப்பை வளர்க்கவும் விரும்பவில்லை. இத்தகைய வெறியுணர்ச்சியும் வெறுப்புணர்ச்சியும், நமக்கு விரோதிகளையே தேடித்தரும். பிரஞ்சு தேசத்து வீராங்கனையான ஆர்க் ஜோனைத் தீயிலிட்டுக் கொன்றனர் ஆங்கிலேயர்கள். என்றாலும், ஆர்க்ஜோனைப் போற்றும் பிரெஞ்சு தேசம் இன்று வாழும் ஆங்கிலேயர்களுக்கு எதிராக வெறி கொள்ளவில்லை. ஆங்கில நாட்டுடன் நட்புக் கொண்டே வாழ்கிறது. அதுபோலவே, வீரபாண்டியனைக் கொண்டாடும் நாமும், அவனைக் காட்டிக் கொடுத்தவர்களின் சந்ததியார்களைப் பகைப்பதில் பயனில்லை. அம்மாதிரி, தமிழனைத் தமிழனே காட்டிக் கொடுக்கும் துரோகச் செயல் இனியும் நிகழாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

தமிழ்ப் பெருமக்களே! புதுக்கோட்டைத் தொண்டைமான் வீரபாண்டியனை வெள்ளையர்களிடம் பிடித்துக் கொடுத்ததின் மூலம் தமிழகத்தின் சுதந்தரத்தையே காட்டிக் கொடுத்துவிட்டார். இருந்த சுதந்திரத்தை அன்னியரிடம் கொடுத்த தவறு தொண்டைமானுடையது. அதே தவறை நாமும் திரும்பச் செய்யக் கூடாது. சாதிவெறி, மதவெறி, பணவெறி ஆகிய வெறியாட்டங்கள், நாம் பெற்றுள்ள சுதந்திரத்தைப் பயமுறுத்துகின்றன. வீரபாண்டியன் செய்த தியாகத்தின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். இந்தவெறிகளையெல்லாம் ஒழித்துக்கட்டி, தியாகத்தால் பெற்ற சுதந்தரத்தை, தேசபக்தியால் காப்பாற்ற முன் வாருங்கள்.

கட்டபொம்மனைக் காட்டிக் கொடுத்தவர்களின் தவறால் தான் லட்சக்கணக்கானவர்கள் சிறைசென்று அல்லல்பட்டனர். ஆயிரக் கணக்கானவர்கள் அடிபட்டும் மிதிபட்டும் அல்லலுற்றனர். நூற்றுக்கணக்கானவர்கள் தூக்குமேடையேறி உயிர் துறந்தனர். இத்துன்பங்களுக்கெல்லாம் பின்னரே நாம் சுதந்திரம் பெற்றோம். மீண்டும் மீண்டும் சாதி, மதச்சண்டைகளுக்கு நாட்டை இரையாக்க வேண்டாம். பெற்ற சுதந்திரத்தைக் காப்பதொன்றே வீரபாண்டியனுக்கு நாம் செலுத்தும் நன்றியாக இருக்கட்டும்.

வீரபாண்டியன் புகழ் பரவிய வரலாறு

கட்டபொம்மன் விழாவை கடந்த ஆண்டுதான் முதன் முதலாகத் துவக்கினோம். இந்த ஓராண்டுக்குள்ளேயே அப்பெருவீரனின் வரலாற்றுக்கு தமிழகம் தக்க மதிப்பு கொடுத்துள்ளது.

சாத்தூர் மாணவர்கள், கட்டபொம்மன் வரலாற்றை வில்லுப் பாட்டாகப் பாடிவருகின்றனர்.

டி. கே. எஸ். சகோதரர்கள், "முதல் முழக்கம்" என்ற நாடகத்தின் மூலம் வீரபாண்டியன் புகழை தமிழகமெங்கும் முழக்கி வருகின்றனர்.

கடந்த ஓராண்டில் தமிழகத்தில் ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளிவரும் நாட் பதிப்புகள், வாரப்பதிப்புகள், மாதவெளியீடு

கள் ஆகியவற்றிலெல்லாம் வீர பாண்டியனைப் பற்றிய கட்டுரை கள் வெளியிடப் பட்டுள்ளன.

கயத்தாற்றிலுள்ள உயர் நிலைப் பள்ளி ஒன்றுக்கு கட்ட பொம்மன் பெயர் வைப்பதென திருநெல்வேலி ஜில்லா போர் டார் தீர்மானித்துள்ளனர்.

தமிழகத்திலுள்ள ஜில்லா போர்டுகள் முனிசிபாலிடிகள் பலவும், மைசூர் சர்வகலாசாலை யாரும் யான் எழுதிய வீரபாண் டியக் கட்டபொம்மன் என்ற நூலை மாணவர்களுக்குப் பாட மாக வைத்துள்ளனர்.

கடந்த ஆண்டில் தமிழகத்தி லுள்ள உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் பலவற்றில் வீர பாண்டியன் விழாவை மாணவர் கள் உற்சாகமாகக் கொண்டா டினர்; இந்த ஆண்டும் அப் படியே கொண்டாடுகின்றனர். கட்டபொம்மன் நாடகங்கள் கூட பல பள்ளிகளில் நடத்தப் பட்டிருக்கின்றன.

கயத்தாற்றில் கட்டபொம் மன் தூக்கிலிடப்பட்ட இடத்தை வரலாற்றுப் பாது காப்பு இடமாகச் செய்யப் போவதாக மத்திய அரசினர் அறிவித்துள்ளனர்.

ஆங்கிலேயருடன் சமர் செய் ததும், வீரபாண்டியன் அரசின் தலை நகருமான பாஞ்சாலங் குறிச்சியில் எவரும் குடியேறக் கூடாதென்று பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் தடை விதிக்கப்பட் டிருந்தது. இத்தடையை நீக்கு மாறு, சென்னை அசெம்பிளியில் எழுப்பப்பட்ட கேள்வி மூலம் அரசாங்கத்தார் வற்புறுத்தப் பட்டுள்ளனர்.

சிப்பாய்ப் புரட்சியி (1857) லிருந்து தொடங்கி இந்திய விடு தலைப் போர் வரலாற்றை எழுது வதற்கென டில்லி அரசினர் அமைத்த வரலாற்றுக் குழு வினருக்கு, பாஞ்சைப் புரட்சியி லிருந்தே விடுதலை வரலாறு எழுதப்பட வேண்டுமென்று பொள்ளாச்சி தமிழரசுக் கழகத் தார் அனுப்பிய கோரிக்கை அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

கட்டபொம்மன் பெயரால் தமிழ் நாட்டின் பல பகுதிகளி லும் கழகங்கள் தோன்றியுள் ளன.

வீரபாண்டியக் கட்டபொம் மனுக்கு பாஞ்சாலங்குறிச்சி யில் நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும். செக்காரக் குடியிலுள்ள அவனது குடும் பத்தார், பாஞ்சாலங்குறிச்சி அரண்மனை இருந்த இடத்தில் வீடு கட்டிக்கொண்டு குடி யேறுவதற்கு சென்னை அரசினர் அனுமதி தரவேண்டும். இந்த இரண்டு கோரிக்கைகளும் நிறைவேற தமிழ் நாட்டுத் தலை வர் காமராஜர், 'கல்கி' ஆசிரியர் போன்றோர் முயற்சி செய்ய வேண்டுகிறேன்.

திரு. ம. பொ. சி.யின் பேச்சு முடிந்ததும், இரவு 8-30 மணிக்கு, 'வீரபாண்டியன் புகழ் வாழ்க' என்ற முழக்கத் துடன் விழா இனிது நிறை வேறியது.

முதற் பலி!

—கு. மா. பா.

(கட்டபொம்மன் பாடல் மெட்டு)

★

வாணிபம் செய்து பிழைப்பதற்கே—இங்கு
வந்து புகுந்திட்ட வெள்ளையர்கள்—பின்பு
காணிக்கை யாகப் பணம்பறித்து—நம்மைக்
கட்டுப்படுத்தத் தொடங்கையிலே,
"தானமென்று கேட்டால் தந்திடுவேன்—கப்பம்
சல்லியும் நான் கொடேன்!" என்றுரைத்து—நாட்டின்
மானத்தைக்காக்கச் சுதந்திரப்போர்—செய்து
மாண்ட முதற்பலி என் தமிழன்!

*　　　*　　　*

பாண்டிய மன்னர் பரம்பரையாய்—வந்து
பாஞ்சைப் பதிதனை ஆட்சிசெய்த—வீர
பாண்டிய மன்னவன் கட்டபொம்மன்—அன்று
பக்குவமாய் இட்ட தீச்சுடர்தான்—பின்பு
மூண்டு எழுந்து பெரும் நெருப்பாய்—நாடு
முற்றும் புரட்சி முழக்கியது—அதில்
மாண்டு நம் வீரர்மடிந்ததனால்—இந்த
மண்ணில் சுதந்திரம் பூத்ததடா!

*　　　*　　　*

ஆட்சி உரிமை அடைந்த பின்னே—அந்த
ஆண்மைக்கு வித்திட்ட செந்தமிழர்—இன
மாட்சியை மூடி மறைப்பவர்கள்—மொழி
மாறிய அந்நியராயிடினும்—அன்றி
சூழ்ச்சிக்கு மானத்தை விற்றுவிடும்—சொந்தச்
சோதரராக இருந்திடினும்—அவர்
வீழ்ச்சியடைந்திடச் செய்திடுவோம்—தமிழ்
ஆட்சியை மீண்டும் அமைத்திடுவோம்!

அட்டைப்பட விளக்கம்:

தேசீயத் தளபதி வ. உ. சி.

★

இந்த இதழ் அட்டைப் படத்தில் காட்சியளிப்பவர் வ.உ. சிதம்பரனார் என்பதை சொல்லத் தேவையில்லை.

கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார் நம்மை விட்டு மறைந்து பதினைன்காண்டுகள் ஆகின்றன. அண்ணல் வ.உ.சி. மண்ணுலகை விட்டு மறைந்த நவம்பர் 18ந்தேதியை தேசியத் திருநாளாகக் கொண்டாட தமிழ மக்களை வேண்டுகிறோம். வீரபாண்டியக் கட்டபொம்மன் துவக்கி வைத்த விடுதலைப் போரில், அடுத்த தளபதியாகத் திகழ்ந்தவர் வ.உ. சிதம்பரனார்.

பிரசாரம் வேண்டும்

சுயாட்சி பெற்ற இந்தியாவில் தமிழகத்துக்குத் தனியாட்சி வேண்டுமென்ற குரல் தேசீய வட்டாரத்தில் பரவி வருகின்றது. மொழிப் பற்றும், இன உணர்ச்சியும் மிகுந்த தமிழர் தளபதி வ. உ. சி. காட்டிய வழியைப் பின்பற்றி தமிழகத்தில் தமிழரசு காணப் பாடுபடுகின்றனர், தமிழரசுக் - கழகத்தார். அவர்கள் • எண்ணிக்கையில் குறைந்தவர்களாயினும், எண்ணத்தில் தூய்மையுடையவர்கள். வ. உ. சி யின் திருநாளில் அவருக்கு வணக்கம் செலுத்துவதோடு நில்லாமல், தமிழரசுக் கோரிக்கைக்கு தமிழ் மக்களிடையே ஆதரவு தேடவும் பிரசாரம் செய்ய வேண்டும். வ. உ. சி. இன்று வாழ்ந்திருந்தால் என்ன செய்திருப்பாரோ, அதைத் தான் நாமும் செய்கிறோம்; வ. உ. சி யின் ஆத்மா நாம் வெற்றிபெற வாழ்த்திக் கொண்டுதானிருக்கிறது என்ற நம்பிக்கையோடே வ. உ. சி. நாளைக் கொண்டாட வேண்டும்.

•

மதுரையிலே சொக்கநாதப் பெருமான் மனித உருவில் வந்து மண் சுமந்தார்; அரிமர்த்தன பாண்டியனிடம் அடிபட்டார் என்பர் புராண வாதிகள். ஆனல், சுதந்திரதேவி மனித வடிவில் வந்து செக்கிழுத்த வரலாறுதான் சிதம்பரனாரின் வரலாறு. சொக்கநாதப் பெருமான் மண் சுமந்தது அறம் தழைக்க! சிதம்பரனார் செக்கிழுத்தது சுதந்திரம் பெற. பழைய புராணம் பொய்யானாலும், சிதம்பரனார் செக்கிழுத்த புதிய புராணம் பொய்யாகிவிட முடியாது.

இன்றைய சுதந்திர இந்தியாவில் உரிமையனுபவிக்கும் ஒவ்வொரு தமிழனும் சிதம்பரனாரின் தியாகத்துக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறான்.

வள்ளுவர் வழி வாழ்ந்த வ.உ.சி.

திருவள்ளுவர் ஒரு புலவர் மட்டுமல்ல; புது உலகச் சிற்பியு

மாவார். வ. உ. சி. காண விரும்பிய புதிய தமிழகம் எந்த வகையில் அமைய வேண்டும் என்பதற்கு திருக்குறள் ஒரு சரியான எடுத்துக்காட்டு.

குடிதழுவிக் கோலோச்சும் அரசே வள்ளுவர் விரும்பிய அரசு. அந்தக் குடியரசைக் காணவே சிதம்பரனார் செக்கிழுத்தார், செந்நீர் சிந்தினார்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புவதே வள்ளுவர் வகுத்த வாழ்க்கை நெறி. அதையே சோஷலிசம் என்கின்றனர் இன்றைய பொருளாதாரப் பண்டிதர்கள். அந்த சோஷலிச சமுதாயத்தை அமைக்கவே சிதம்பரச் செம்மல் சுதந்திரம் கோரினார்.

திருக்குறளை உலகமறை என வாழ்த்துகிறோம். ஆனால் அதன் வழியில் வாழ்க்கை நடத்துகிறோமில்லை. சிதம்பரனார் திருக்குறளுக்கு வாழ்த்துக் கூறியவர் மட்டுமல்லர். அது கூறும் நெறிப்படி வாழ்ந்து காட்டியவர். சிதம்பரனார், வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்திலும் திருக்குறள மணம் வீசியதெனலாம்.

"தமிழர் யார்?" என்று கேள்வி கேட்கின்றனர், தமிழராகப் பிறந்தும தமிழ்ப் பண்போடு வாழாத சிலர். திருக்குறள் வழி வாழ்க்கை நடத்துகிறவனே தமிழன் என்ற உண்மையை தாமே வாழ்ந்து காட்டி வற்புறுத்தினார் வ.உ.சி.

வ. உ. சி. தமிழ் இனத்தின் புகழ் விளக்க வந்த வான்விளக்காவார். அவரது வாழ்க்கை வரலாறு திருக்குறளின் தெளிவுரை. அவ்வீரப் பெருமகன் நிகழ்த்திய அரசியல் புரட்சி, தமிழினத்தின் ஆற்றலுக்கோர் அத்தாட்சி.

வ. உ. சி., தேசிய விருட்சத்தின் அடிவேர்; ஆணிவேறென்றும் கூறலாம். 'தேசியப்' பண்பை மக்களிடையே பரப்பிய பெருமை காங்கிரசுக்கே உரியது. என்றாலும், 'தேசியம்' காங்கிரசின் தனியுடைமையல்ல. தேசமக்களின் பொதுப் பண்பு. ஆனால், தேசத்தின் நலன்களுக்கு மாறுபட்ட வழியில் செல்லுவோர், வ. உ. சி. நடத்திய தேசியப் போராட்டத்திற்கு மாறான பாதையிலேயே இன்றளவும் சென்றுகொண்டிருப்போர் தேசியவாதிகளாக மாட்டார்கள்.

சிதம்பரனார் செக்கிழுத்த காலத்தில், திருப்பூர் குமரன் செந்நீர் சிந்திய நேரத்தில், அவர்கள்பால் அனுதாபம் காட்டாதவர்கள், அவர்களைக் கொடுமைப் படுத்திய - கொலை புரிந்த கொடுங்கோலர்களைக் கும்பிட்டு வாழ்ந்தவர்கள், இன்று, வ. உ. சி. பெயராலும், குமரன் பெயராலும்கூட தேசிய எதிர்ப்பைத் தொடர்ந்து நடத்திவரத் துணிந்து விட்டனர். ஆகவே, தமிழரின தேசிய தளபதியின் திருநாளைக் கொண்டாடும்போது தேசிய எதிர்ப்புச் சக்திகளின் வேஷத்தை வெளிப்படுத்த வேண்டியதும் நமது கடமையாகும்.

தேசிய எதிர்ப்புச் சக்திகள் ஒழிந்து தேசீய நெறி தழைக்க வேண்டுமாயின் வ. உ. சி. வரலாறு தமிழகமெங்கும் பரவ வேண்டும். தேசியத்தை வணங்க விரும்பும் ஒவ்வொரு தமிழனும் வ. உ. சியின் திருவுருவப் படத்திற்கு வணக்கம் செலுத்த வேண்டும். ஆம்; வ. உ. சி. வேறு; தேசியம் வேறு அல்ல. தேசீயத்தையே மூச்சாகக்கொண்டு வாழ்ந்தவர் வ. உ. சி. ஆகவே வ. உ. சியைப் பாராட்டுவோர் தேசியத்தைப் பழித்தல் கூடாது. தேசியத்தைப் பழித்துக்கொண்டே வ. உ. சியை வாழ்த்துவது அவரது ஆத்மாவுக்கு வேதனை தரும் செயலாகும். தமிழகம் வாழ்வதும் தமிழரது உரிமைக்காகப் போராடுவதும், அதே நேரத்தில் அகில இந்தியாவோடும் உறவு கொள்வதுமே வ.உ.சி. கண்ட தேசீயம்.

வ. உ. சி. புகழ் வாழ்க!

தமிழகத்தின் கலைச்சோலையில்
தன் செயலாற்ற வருகிறான்!

காவியத்தில், ஓவியத்தில்
விஞ்ஞானத்தில், வரலாற்றில்
இசையில், கூத்தில்

இணைந்து சஞ்சரிக்க
இன்றுமுதல் உலவுகிறான்

கலைஞன்

(மாதப் பத்திரிகை)

ஆசிரியர்: சிதம்பரம் - ஜெயராமன்

நவம்பர் இதழ் வெளிவந்து விட்டது

தனிப்பிரதி அணா 4. ஆண்டு சந்தா ரூ. 3.

ஏஜண்டு இல்லாத ஊர்களுக்கு
ஏஜண்டுகள் தேவை.

மானேஜர்: கலைஞன் காரியாலயம்,
P. B. No. 18, சிதம்பரம்.

இந்தியாளர்கள் சிந்திப்பார்களா?

'நேசியவாதி'

★

இந்தி நல்லெண்ணத் தூதுக் குழுவினர் வடக்கேயிருந்து தமிழகம் வந்தனர்; தமிழ் அறிஞர்கள், அரசியல்வாதிகள், அமைச்சர்கள், கிளர்ச்சிக்காரர்கள் ஆகியவர்களை யெல்லாம் சந்தித்துப் பேசினர். தூதுக்குழுவின் உறுப்பினர்கள் அத்தனை பேரும் வடநாட்டினர்; வடமொழியினர். எப்படியும் இந்தியை இந்தியாவின் பொது மொழியாகச் செய்தே தீருவதென கங்கணங் கட்டிப் பாடுபடுபவர்கள். இத்தகைய ஒரு தூதுக் குழுவினர், தமிழ் நாடு வந்தது இந்திக்கு ஆதரவு தேடத்தான் என்பதை நாம் சொல்லத் தேவை இல்லை. ஆனால், இந்தக் குழுவினர் 'நல்லெண்ணத் தூதினர்' எனத் தங்களுக்குத் தாங்களே பெயரிட்டுக் கொண்டுள்ளனர். அதாவது இந்தி மொழி பரவுவதற்கு தமிழரின் நல்லெண்ணத்தைப் பெறுவதே இந்தக் குழுவினரின் கொள்கையாம்.

இந்தி மொழிக்கு தமிழ் நாட்டில் எதிர்ப்பு இருக்கிறது என்பது வெள்ளிடைமலை. எதிர்ப்பு இருவகையானது. அரசியல் காரணங்களுக்காக மட்டுமே எதிர்ப்போர் ஒரு தரப்பினர். தமிழ் மொழியின் நலத்திற்காகவும், தமிழரின் நன்மைக்காகவுமே எதிர்ப்பவர் மற்றொரு தரப்பினர்.

இந்தியை எதிர்ப்போரில், முதல்தரப்பினரின் கூக்குரல் பலமாயிருப்பினும், எண்ணிக்கையில் இரண்டாந் தரப்பினரே அதிகம். தமிழ்மொழியின் நலத்திற்காகமட்டும் இந்தியையெதிர்ப்பவர்களுக்கு அந்த மொழியிடம் எத்தகைய வெறுப்பும் கிடையாது. இந்தியாவின் ஐக்கியத்திற்காக இந்தி பொது மொழியாக இருப்பதையும் ஏற்றுக் கொள்பவர்கள். ஆட்சேபணையெல்லாம் இந்திமொழி தமிழகத்தில், தமிழரசில் ஆதிக்கம் செய்யக்கூடாது என்பது தான். இதை டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார், பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் ஆகியோர் தூதுக்குழுவினரிடம் தெளிவாக உரைத்துள்ளனர். தூதுக் குழுவினர் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரையையும், சந்தித்துப்பேசியுள்ளனர். இதை நாம் வரவேற்கிறோம். திரு. தெ. பொ மீனாட்சிசுந்தரனார்போன்ற இந்தியின்பால் நல்லெண்ணமுடைய அறிஞர்களின் எச்சரிக்கையை அலட்சியம் செய்தால், இந்தியாவில் இன்னொரு 'ஸ்தான்' ஏற்படுமென்பதை குழுவினர் புரிந்துகொண்டிருப்பார்களல்லவா? சென்னை அமைச்சர்கள், தமிழ் நாட்டில் இந்தியை எதிர்ப்பவர்களெல்லாம் அரசியல் கிளர்ச்சிக்காரர்களே என அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். இது உண்மையின் ஒரு பகுதியேயொழிய, முழு உண்மையன்று. தெ.

பொ. மீனாட்சிசுந்தரனார், டாக்டர் ஆர். கே. சண்முகம் போன்றவர்கள்கூட அரசியல் காரணங்களுக்காகத்தான் இந்தியை எதிர்க்கிறார்கள் என்று அமைச்சர்கள் கருதுவார்களானால், அவர்களது அறியாமைக்காக வருந்துகிறோம். உண்மை என்னவென்றால், அரசியல் துறையில் காங்கிரஸ் வாதிகளாயிருப்பவர்கள் - காங்கிரசிடம் அனுதாபம் காட்டுகிறவர்கள்கூட இந்தியின் ஆதிக்கத்தை எதிர்ப்பதால்தான் திராவிடஸ்தான் வாதிகளின் அரசியல் கிளர்ச்சி பலப்பட்டு வருகிறது. ஆகவே, 'ஸ்தான்' வாதிகளின் கூச்சல் தமிழ் மக்களால் எதிர்க்கப்பட வேண்டுமாயின் வடநாட்டவரின் இந்தி வெறி தொலைந்தாக வேண்டும். இந்த உண்மையை தூதுக் குழுவினரிடம் தெரிவித்திருக்க வேண்டியது சென்னை அமைச்சர்களின் கடமையாகும். அவர்கள் இந்தக் கடமையைச் செய்யத் தவறியதற்காக வருந்துகிறோம்.

இந்தியின்பால் தமிழரின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்காக வடநாட்டுப் பள்ளிகளில் தென்னாட்டு மொழியொன்றைப் பாடமாக வைக்க முயற்சி செய்யப் போவதாக தூதுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். இதை நாம் வரவேற்கிறோம். ஆனால், இதனாலேயே தமிழ் நாட்டில் இந்திக்குத் தோன்றியுள்ள எதிர்ப்பைத் தவிர்த்துவிட முடியாது. தமிழர்கள் இந்தியை நல்லெண்ணத்துடன் வரவேற்க வேண்டுமென்றால், தூதுக் குழுவினர் பின்வரும் திட்டங்களைச் செயலாற்றும்படி மத்திய அரசினரை வற்புறுத்த வேண்டும்.

மாகாண மக்களின் கல்வி, கலாச்சாரத் துறைகளில் எந்தக் காரணத்தைக் கொண்டும் மத்திய அரசினர் தலையிடுவதோ, தாக்கீது அனுப்புவதோ தவிர்க்கப்பட வேண்டும்.

இந்தி மொழி பேசாத மாகாணங்களில், இந்தி எந்தக்காலத்திலும், எந்த வகையிலும் சட்டசபையில் பேசப்படும் மொழியாகவோ, நிர்வாகங்களை நடத்தும் மொழியாகவோ, அல்லது கோர்ட் மொழியாகவோ இருக்காதென்று உறுதிகூற வேண்டும்

மொழி வழி மாகாணங்கள் உடனடியாகப் பிரிக்கப்பட்டு, மாகாணங்களில் அந்தந்த மாகாண மொழிகளே அரசு மொழியாக இருக்கும்படிச் செய்யவேண்டும்.

இந்தி மொழிபேசாத மாகாணங்களின் சட்டசபைகளில் நன்கு விவாதிக்கப்பட்டு-காங்கிரஸ் மேலிடத்தின் தாக்கீது இன்றி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் அனுமதியளிக்கும்வரை, ஆங்கிலமே மத்திய அரசு மொழியாகவும், மாகாணங்களோடு தொடர்புகொள்ளும் மொழியாகவும் இருக்க வேண்டும்.

தமிழ், தெலுங்கு, வங்காளம் போன்று இந்தியும் ஒரு மாகாண மொழியாகவே இருப்பதால், அதை இந்தியாவின், 'தேசிய மொழி' என்

ளுமல், 'பொது மொழி' அல்லது 'பொடரல் மொழி' என்ற பெயரில் அழைக்கப்பட வேண்டும்.

இத்தகைய திருத்தங்களைச் செய்தாலொழிய தமிழ் மக்களுக்குத் திருப்தி ஏற்பட முடியாது. இந்தி எதிர்ப்பைக் கொண்டே 'ஸ்தான்' வாதிகள் வெற்றியடைந்து விடுவார்கள் என்ற அச்சத்தால் இவற்றை நாம் கூறவில்லை. தமிழின்பால் கொண்ட அன்பாலும், இந்திய ஐக்கியத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையாலுமே இதை வற்புறுத்துகிறோம்.

ஆங்கிலம் இன்னும் 15 ஆண்டுகளுக்கல்ல; அவசியமானல் அதற்கு மேலும் மத்திய அரசு மொழியாக இருந்துவர குடியரசுச் சட்டம் அனுமதிக்கிறது. ஆகவே, நாம் மேலே சொன்ன திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சட்டம் குறுக்கே இல்லை. இந்தி மொழியாளர்களின் சண்டித்தனம் தான் குறுக்கே நிற்கிறது. தமிழினத்தின் நலத்திற்காக, தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக ஒரு துரும்பைக்கூட தூக்கிப் போடாதவர்களெல்லாம் எப்படி தமிழகத்தின் "தலைவர்களாக" மிளிருகிருர்கள் என்பதை தூதுக்குழுவினர் நேரில் கண்டிருக்கிருர்கள். இந்த அனுபவத்தைக் கொண்டேனும் இந்தி விஷயத்தில் வடநாட்டவரின் அபிப்பிராயத்தைத் திருத்துவார்களென்று நம்புகிறோம்.

காதலின் சக்தி

(விக்டர் ஹ்யூகோ)

காதலர்கள் பிரிந்திருக்கும் போது அவர்களை ஒருவருக்கொருவர் கடிதம் எழுதலாகாதென்று தடுத்தால், நமக்குத் தெரியாதபடி ஆயிரம் ஆச்சரிய வழிகள் கண்டுபிடித்துப் பேசிக்கொள்கிருர்கள். பறவைகளின் பாட்டையும், மலர்களின் கந்தத்தையும், குழந்தையின் சிரிப்பையும், ஞாயிற்றின் ஒளியையும் காற்றின் உயிர்ப்பையும் விண்மீன்களின் கதிர்களையும் காதலர் தூது விடுகிருர்கள். ஏன் விடக்கூடாது? தெய்வத்தின் படைப்புக்கள் அனைத்தும் காதலுக்குத் தொண்டு செய்யும் பொருட்டே அமைந்திருக்கின்றன. உலக முழுவதையும் தூது போகச் செய்கிற திறமை காதலர்க்குண்டு.

இளவேனிற் காலமே நான் அவளுக்கு எழுதுகிற ஓலை நீ.

உயிரே, நீ கல்லாய்ப் பிறந்தால் காந்தக் கல்லாய்ப் பிற; செடியானல், தொட்டால் வாடிச் செடியாகி விடு; மனிதனானல் காதல் செய். காதலர் இல்லாவிடில் ஞாயிறு என்றதோர் தீப்பந்தம் அணைந்து விடும்.

"திருவிதாங்கூர் தமிழர்களின் மானத்தைக் காப்பாற்றுங்கள்"

★

கண்ணீர்ப் பெருக்குடன் கவிமணியின் வேண்டுகோள்

அக்டோபர் 25-ம் தேதி நாகர்கோயில் "சரஸ்வதி தியேட்டரி'ல் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளைக்குத் தமிழ் நாட்டுப் பிரமுகர்கள் பொன்னாடை போர்த்தி புகழுரைகள் கூறினர்.

விழாவிற்கு ஆர். கே. சண்முகம் தலைமை வகித்தார். தியேட்டருக்கு உள்ளும் புறமுமாகச் சுமார் பதினையிரம் தமிழ் மக்கட்கு மேல் கூடியிருந்தனர். சென்னை மாகாண தமிழ் ஜில்லாக்களிலிருந்து பிரமுகர்கள் பலர் விழாவில் பங்கு கொண்டனர். கவிமணியவர்களும், மேடையில் சாய்வு நாற்காலியில் படுத்திருந்த வண்ணம் நிகழ்ச்சிகளைக் கவனித்து வந்தார்.

அரசவைக் கவிஞர் நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை கவிமணியைப் பாராட்டி அனுப்பியிருந்த பாடல்கள் பாடப்பெற்றன. பின்னர் திருவாளர் டி. கே. சி., ஸி. எஸ். ரத்தின சபாபதி முதலியார், பி. டி. ராஜன், திரு. ம. பொ. சி. திரு. கரிய கவுண்டர்' திரு. சின்ன அண்ணாமலை, திரு. சா. கணேசன் ஆகியோர் கவிமணி தமிழுக்குச் செய்துள்ள தொண்டுகளைப் பாராட்டிப் பேசினர்.

தலைவர் ஆர். கே. சண்முகம் முடிவுரை கூறுகையில், கவிமணியின் கவிதா சக்தியைப் போற்றினர். மேலும் பேசுகையில், திருவிதாங்கூரிலுள்ள தமிழர்கள் சென்னை மாகாணத்தில் உள்ள தமிழர்கட்கு அந்நியர் என்ற எண்ணம் வேண்டாம். நீங்களும் நாங்களும் ஒரே தமிழ் இனத்தவர்தான். தமிழ் நாடு வேறு; நாஞ்சில் நாடு வேறல்ல" என்று கூறினர்.

நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன் வந்திருந்தவர்களுக்கு நன்றியுரை வழங்கையில் திருவிதாங்கூர் தமிழர்களும் சென்னை மாகாணத் தமிழர்களும் ஒரே இனத்தவர்தான் என்றாலும் இன்றுள்ள நிலைமையில் மலையாள ஆட்சியின் கீழ் அகப்பட்டுள்ள நாஞ்சில் நாட்டுத் தமிழர்கள் சென்னை மாகாணத் தமிழர்கட்கு அந்நியராகத் தான் உள்ளனர். மொழி, கலாசாரத்தைப் பொறுத்தவரை நாஞ்சில் நாட்டாரும் தமிழர்கள்தான். ஆனல், அது மட்டும் போதாது. அரசியல் பொருளா

தாரம் ஆகிய மற்ற துறைகளிலும் நாங்கள் தமிழராக வாழ வேண்டுமானால் திருவிதாங்கூர் தமிழகம் தாய்த் தமிழகத்தோடு சேர்க்கப்பட்டே ஆகவேண்டும். அதற்காகப் பாடுபட வேண்டியது டாக்டர் ஆர்.கே.எஸ். போன்றவர்கள் பொறுப்பாகும் என்றார்.

மறுநாள் காலை டாக்டர் ஆர், கே.எஸ். திரு. ம.பொ.சி., என்.எஸ்.கே., டி.ஏ. மதுரம், சின்ன அண்ணாமலை ஆகியோர் புத்தேரியில் உள்ள கவிமணி இல்லம் சென்று அப்புலவர் பெருமானிடம் விடைபெற விரும்பினர். உடற்பலம் குன்றியிருப்பதன் காரணமாகப் பேசவும் திறனற்றிருந்த கவிமணி அவர்கள் மெல்லிய குரலில் கூறியதாவது :—

"நேற்று நீங்கள் எல்லோரும் எனக்குச் செய்த பெருமைக்கு நன்றி செலுத்துகிறேன். எனக் கூறிவிட்டு, டாக்டர் ஆர். கே. எஸ். அவர்களைப் பார்த்து "நீங்கள் செய்யவேண்டிய உதவி இன்னும் ஒன்றுண்டு. திருவிதாங்கூர் தமிழர்களாகிய நாங்கள் உணவுக்காகவோ உடைக்காகவோ கவலைப்படவில்லை. எப்படியோ வாழ்ந்து கொண்டுதான் உள்ளோம். ஆனால் நாங்கள் மானத்தோடு வாழ முடியவில்லை. மலையாள ஆட்சியினர் ஒவ்வொரு விஷயத்திலும் எங்கள் மான உணர்ச்சியை மிதித்து மனதைப் புண்படுத்துகின்றனர்.

எப்படியேனும், திருவிதாங்கூர் தமிழ்ப் பிரதேசங்களை சென்னை மாகாண தமிழகத்தோடு சீக்கிரம் சேர்த்துவிட முயற்சி செய்யுங்கள். அதற்காக என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்பதை (ம.பொ.சி.யைக் காட்டி) அவர் அறிவார். அவரைக் கலந்து கொண்டு செய்யுங்கள். உங்களிடமிருந்து நான் எதிர்பார்ப்பது இதுதான்" என்றார்.

இந்த வார்த்தைகளைக் கூறும் போது கவிமணி உணர்ச்சி மிகுதியால் நெஞ்சு விம்ம கண்களினின்றும் நீர்த் துளிகளைச் சிந்தினர்.

கொடுமைக்கு வழிபாடு!

சிலர், மக்களிடையே சகிப்புத் தன்மையை அதிகமாக போதிப்பதற்குக் காரணம் தாங்கள் செய்யும் கொடுமைகள் எதிர்க்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். அதற்காகவே, சில பழக்கவழக்கங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திருடுவது பூனையின் பிறவிக்குணம்; ஆனால், அதை அடித்தால் பாவம் என்பது உபதேசம். பாம்புக்கு பல்லில் நஞ்சுண்டு. ஆயினும், அதற்குப் பாலூற்றி வளர்க்க வேண்டும் என்பது பரம்பரைக் கொள்கை. இவற்றால்தான் சமூகத்தில் கொடுமையை எதிர்க்கும் சக்தி குறைந்துவிட்டது. அதுமட்டுமல்ல; அந்தக் கொடுமைகள் செய்வோரைக் கும்பிட்டு வாழ வேண்டுமென்ற கண்மூடிக் கொள்கையும் வளர்ந்து வரலாயிற்று.

நாஞ்சிற் புலவர்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

மதிப்புரை

மேகரலிநகர் மாநாடு:

பதிப்பாசிரியர்: திரு. டி. எஸ். ராமநாதன்; விலை ரூ. 1-12-0.

தேசீய புனருத்தாரணத் திட்டம்:

மொழி பெயர்த்தவர்: திரு. வி. ஆர். ராதாகிருஷ்ணன். விலை நாலணு.

இந்த இரண்டு பிரசுரங்களையும் வெளியிட்டோர், சென்னை சோஷலிஸ்ட் பதிப்பகத்தார். கிடைக்குமிடம்: பாரி நிலையம், 59, பிராட்வே சென்னை-1.

பிரசுரங்களின் மூலம் பிரச்சாரம் செய்வது ஜனநாயக உரிமைகளில் ஒன்ருகும். ஆனல் இந்நாளில் சில குழுவினரால் இந்தப் பிரசுரப் பிரசாரங்கள் நாட்டினரின் நன்மைக்கல்லாமல் பெரும்பாலும் தீமைக்கே பயன்படுத்தப் படுகின்றன. மேடைப் பேச்சு மூலம் தவறிழைத்தாலும் கூட, அதன் கேடுகளிலிருந்து நாடு தவிர்க்கப் பட[illegible] ஆனல், பிரசுரங்களின் மூலம் விஷ வித்துக்களை சமூகத்தில் பரவ விட்டு விட்டால், அதன் விபத்துக்களிலிருந்து மக்கள் தப்புவது அரிதாகி விடும். அது, கடலில் தூவப்படும் விஷக் கண்ணிகள் போன்றதாகும். ஆனல், சோஷலிஸ்ட் பதிப்பகத்தார் வெளியிட்டுள்ள மேற்படி இரண்டு பிரசுரங்களும் இந்த விபரீதங்களுக்குப் புறம்பாக, ஜனநாயகப பண்புக்கு ஒத்ததாக இருக்கின்றன.

வர்க்கம் வேற்றுமையை போராட்டத்தை வற்புறுத்துமிடங்களிலும் நிதானந் தவறவில்லை; வெறியூட்டும் வார்த்தைகளோ வாசகங்களோ இல்லை.

முதல் பிரசுரம், கடந்த ஜூலை மாதத்தில் சென்னையில் நடைபெற்ற சோஷலிஸ்ட் மாநாட்டின் நடவடிக்கைகளை விளக்குகின்றது. கண்கவரும் முகப்புப் படத்துடன் கூடிய அழகிய பதிப்பு; குறைந்த விலை. சோஷியலிஸ்ட் கட்சியின் வளர்ச்சி பற்றிய அறிக்கை, அதன் கொள்கைகள், பிரதேசவாரி நிர்வாக உறுப்பினர்களின் பெயர்கள் ஆகியவை பற்றிய முழுவிவரங்களும் தலைவர்களின் சொற்பொழிவுகளும் இதில் அடங்கியிருக்கின்றன. பிரசுரத்தில் சோஷியலிஸ்ட் கட்சித் தலைவர்களின் (தமிழ் நாட்டினரைத் தவிர) படங்கள் பல சேர்க்கப்பட்டுள்ளன. மாநாட்டுப் பந்தலில், தீர்மானங்களின் மீது கைதூக்கும் படத்தில் பல தமிழர்களும் காணப்படுகின்றனர்!

இரண்டாவது பிரசுரம், சோஷியலிஸ்ட் கட்சியின் எட்டாவது தேசிய மாநாட்டில் வெளியிட்ட பதினெட்டு அம்சங்களைப் பற்றிய அறிக்கையாகும். திட்டங்களைப் பற்றிய நுணுக்கங்கள் விளக்கப்படவில்லை. சான்ருக, வகுப்புவாதம், மாகாணப் பித்து, மொழி வெறி, ஆகியவைகளைப் பற்றி எடுத்த எடுப்பிலேயே கண்டனம் செய்கிறது பிரசுரம். ஆனல், ஆதிக்கம் செலுத்தும் சாதியிடமிருந்து அடிமைப் பட்டு அல்லலுறும் சாதியை மீட்பதெப்படி? ஆதிக்கம் செலுத்தும் - செலுத்தத் துவங்

செய்திகள் ★ ★

கட்டபொம்மன் விழா

வீரபாண்டியக் கட்டபொம்மன் நினைவு நாளை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள தமிழரசுக் கிளைக் கழகங்களும், வேறுபல கழகங்களும், சிறப்பாகக் கொண்டாடினர்.

சென்னை நகரில் சட்டக் கல்லூரி, எஞ்சினீயரிங் கல்லூரி, பெரம்பூர் பாரதி தேசீய வாலிபர் சங்கம், பெரியமெட்டு வ. உ. சி. சங்கம் ஆகியவற்றில் கட்டபொம்மன் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கள்ளக்குறிச்சி, திருவள்ளூர் திருப்பத்தூர், சேலம், செஞ்சி, திருநெல்வேலி, புதுவை, காரைக்குடி, பொள்ளாச்சி, கயத்தாறு, நாகர்கோயில் ஆகிய பல ஊர்களில் நடந்த கூட்டங்களில் கவிஞர் கா. மு. ஷெரீப்பு, திருவாளர்கள் துரை சுந்தரேசன், கொ. மொ. ஜனார்த்தனர் ந. சஞ்சீவி, மு. வேணுகோபால் சிவ. கண்ணப்பர், கி. கவிதைநேசன், கே. எம். சீனிவாசன் கு. ஆவுடையப்பன், த. சித்தரஞ்சன், தெ. ஆண்டியப்பன், மா. நீலகண்டன், சி. ஜி. எஸ். மணி, ந. முருகன், எஸ். மாணிக்கவாசகம் முதலியோர், வீரபாண்டியன் புகழை விரித்துரைத்தனர். எல்லாக் கூட்டங்களிலும் இந்திய சுதந்திரப் போர் வரலாற்றைப் பாஞ்சைப் புரட்சியிலிருந்தே எழுத வேண்டும் என மத்திய அரசினரை வற்புறுத்தி தீர்மானங்கள் நிறைவேறப்பட்டன.

கும் மொழிகளிடமிருந்து அடிமைப்பட்டுள்ள மொழிகளுக்கு உரிமை வழங்குவது எப்படி? என்பன பற்றிய விவரங்கள் இல்லை. பொதுவாக பதினெட்டு அம்சங்களும் பாமர மக்களைக் கவர்ச்சி செய்வதற்கான கோஷங்களாகவே இருக்கின்றன. விஷயமறிந்த மத்தியதர வகுப்பினரைத் தங்கள் பக்கம் இழுக்கக் கூடிய வகையில் கொள்கை பற்றிய நடைமுறைகள் விளக்கப்படவில்லை.

சோஷலிசம் வளர்ச்சிக்குரிய பாதையில் செல்ல வேண்டுமென்றே ஒவ்வொரு ஜனநாயக வாதியும் விரும்புவான். அந்த வகையில் சோஷலிஸ்ட் கட்சியினரேயல்லாமல் ஏனைய தரப்பினரும் இந்தப் பிரசுரங்கள் இரண்டையும் படிக்க வேண்டியது அவசியமாகும்.

சிலப்பதிகாரச் சொற்பொழிவு

வட சென்னை இந்திய மாதர் சங்கத்தின் சார்பில் கடந்த 28—10—50-ல் சிலப்பதிகார வகுப்பு துவக்கி வைக்கப்பட்டது. திரு. தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமை தாங்கினார். திரு. ம. பொ. சி. சிலப்பதிகாரத்தைப் பற்றி தமது முதற்சொற்பொழிவை நிகழ்த்தினார். திருவாளர்கள் பெரியசாமித்தூரன், சீனிவாசராகவன் ஆகியோர் ம. பொ. சியின் தமிழ்த் தொண்டைப் பாராட்டிப் பேசினார்கள். திருமதி. வி. கே. சீதாலட்சுமி குமாரசாமி நன்றி கூறினார்.

கலைக் கழகம்

நாகர்கோயில் கலைக் கழகத்தின் சார்பாக அக்டோபர் 25-ந் தேதி இரவு 9 மணிக்கு அவ்வூர் முனிசிபல் மைதானத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. திரு. தாணுலிங்கம் தலைமை வகித்தார். திரு. ம.பொ.சி., பாளையங்கோட்டை ஒப்பந்தத்தின் கேடுகளை விளக்கிக் கூறியதோடு, மேலும் அம்மாதிரி தீமை தரும் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளாமலிருக்க வேண்டிக் கொண்டார்.

திரு. சின்ன அண்ணாமலை தற்கால அரசியல் நிலை குறித்துப் பேசினார்.

செங்கோட்டை

செங்கோட்டை காங்கிரஸ் (தி. த. காங்கிரஸ்) கிளையின் ஆதரவில் அவ்வூர் முத்துசுவாமி பார்க்கில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. திரு.ம.பொ.சி.க்கு செங்கோட்டை தமிழரசுக் கழகத்தின் சார்பில் வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது. வாஞ்சி இளைஞர் கழகம் முதலிய பல கழகத்தினர் மாலை சூட்டி வரவேற்றனர். திரு. என். கே. எஸ். கிருஷ்ணசாமிக் கரையாளர் தலைமை வகித்தார். திரு. ம. பொ. சி. தமது சொற்பொழிவில் செங்கோட்டை மலையாள ஆட்சியின் சுற்றுப் பிரதேசமென்றும் தமிழர்களே வாழும் அந்தப் பகுதியை உடனடியாக சென்னை மாகாணத்தோடு சேர்ப்பதற்கான கிளர்ச்சியைச் செய்யவேண்டுமென்றும் கூறினார்.

தமிழரசுக் கழகம்

மறுநாள் காலை 10 மணிக்கு திரு. என். கே. எஸ். கரையாளர் இல்லத்தில் தமிழரசுக் கழக உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது. திரு. ம.பொ.சி. கழகத்தின் கொள்கைகளையும், செயல் திட்டங்களையும் விளக்கிப் பேசினார். மாலை 6 மணிக்கு இலஞ்சூரில் திரு. எ. ஆர். கரையாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலும் திரு. ம. பொ. சி. பேசினார்.

(38-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பு :— இந்தக் கடிதம், 'விடுதலை' 2[illegible]—10—50 இதழில் கீழ்க்கண்ட குறிப்புடன் வெளியிடப் பட்டுள்ளது. குறிப்பு வருமாறு :—

"26–10–50-ம் தேதி தோழர் கிராமணியாரைப் பற்றி எழுதிய குறிப்பு அவருக்கு குறைவேற்பட வேண்டும்; அவர் பொதுத் தொண்டிற்குக் களங்கம் ஏற்பட வேண்டும் என்று கருதி எழுதப்பட்டதல்ல. அவர் பேரால் வெளியான ஆயிரக் கணக்கான துண்டு விளம்பரத்தால் ஏற்பட்ட நிலைமையைச் சமாளிக்க எழுதப்பட்டதாகும். ஆகையால் கிராமணியார் இந்த எழுத்தால் தனது பொதுவாழ்வு களங்கப்பட்டு விட்டதாகக் கருதுவது நமக்கு ஆச்சரியத்தை விளைவிக்கிறது"

மேலே வெளியிடப்பட்டிருக்கும் எனது கடிதத்தில் தடித்த எழுத்துக்களில் காணப்படும் பகுதிகளை விடுதலை பிரசுரிக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ம. பொ. சி.

'விடுதலை'யின் பொய்ப் பிரசாரத்திற்கு ம. பொ. சி.யின் மறுப்பு

"விடுதலை" ஆசிரியர் ஈ. வெ. ரா. மணியம்மைக்கு

ஆசிரியரே,

தங்களை ஆசிரியராகக் கொண்டு சென்னையிலிருந்து வெளிவரும் 'விடுதலை' 26-10-50 இதழில் "கிராமணியார்" என்ற தலைப்பில் என்னைப்பற்றி மிகவும் கீழான முறையில் எழுதப்பட்டுள்ள பகுதியையும், அதற்குக் காரணம் எனக் கருதப்படும் தமிழ் நாடு மாகாண வாலிபர் காங்கிரஸ் கமிட்டியார் வெளியிட்டிருந்த துண்டுப் பிரசுரத்தையும் ஒரு நண்பரின் மூலம் இன்றுதான் கண்ணுற்றேன்.

பிரஸ்தாப துண்டுப் பிரசுரத்தை முதன் முதலாக இன்றுதான் பார்த்தேன்; படித்தேன். அதுவும் தங்கள் பத்திரிகையில் வெளியான கண்டனக் குறிப்பின் விளைவாகத்தான் அந்தப் பிரசுரம் என் கைக்கு வர நேர்ந்தது. இதை வெளியிட்டவர்கள் இது சம்பந்தமாக என்னிடம் எந்தவிதமான ஆலோசனையோ அல்லது அனுமதியோ பெற்றதில்லை. ஆகவே பிரசுரத்திலுள்ள எந்த ஒரு வரிக்கோ, வார்த்தைக்கோ நான் பொறுப்பேற்பதற்கில்லை. அந்தப் பிரசுரத்தில் என் பெயரைச் சேர்த்தவர்கள் யார் என்பதையும் விசாரித்து வருகிறேன்.

நான் பொறுப்பேற்க முடியாத ஒரு பிரசுரத்தை ஆதாரமாகக் கொண்டு, நேர்மையற்ற முறையில் என்னைப்பற்றி விடுதலை'யில் கண்டனக் குறிப்பு வெளியாகி இருக்கிறது. வெறும் சந்தேகத்துக்குரிய சந்தர்ப்பத்தைச் சாதகமாகக் கொண்டு வேண்டுமென்றே என்னைப்பற்றி பொது மக்களிடையே தவறான எண்ணத்தைப் பரப்ப, இந்தக் கண்டனக் குறிப்பை தாங்கள் வெளியிட்டிருப்பதாக நான் எண்ண இடமிருக்கிறது. பிரஸ்தாப பிரசுரத்தைப் பற்றி தாங்கள் கண்டனம் வெளியிடுமுன், அதை என்னிடம் அனுப்பி, அதற்கு நான் பொறுப்பாளியா, இல்லையா என்பதைத் தெரிந்து கொண்டிருக்கலாம். இது ஒரு பத்திரிகாசிரியரின் கடமையுமாகும். ஆனால், தாங்கள் அப்படிச் செய்யத் தவறியதின் மூலம் எனது பொது வாழ்விற்கு களங்கத்தை யுண்டாக்கியிருக்கிறீர்கள். ஆகவே, இந்த மறுப்புக் கடிதம் முழுவதையும் தங்கள் பத்திரிகையின் பிரதான பகுதியில் வெளியிடுவதுடன், **வேண்டுமென்றே என்னைப்பற்றி கண்ணியக் குறைவான முறையில் அபிப்பிராயத்தை வெளியிட்டதற்காக என்னிடம் மன்னிப்பும் கோரவேண்டும். இந்த இரண்டையும், எனது நோட்டீசைப் பெற்றுக்கொண்ட நான்கு நாட்களுக்குள், செய்யத் தவறினால், தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

சென்னை
28—10—50

தங்கள்,
ம.பொ. சிவஞானம்

(38-ம் பக்கம் பார்க்க

வீரக்கண்ணகி

○

தமிழரசுக் கழகத் தலைவர்

திரு. ம. பொ. சிவஞானம்

எழுதியது

○

அரசியல் கண்ணோட்டத்துடன்
ஆராய்ந்து எழுதப்பட்ட
அரிய நூல்

○

அச்சாகிக் கொண்டிருக்கிறது

விரைவில் வெளிவரும்

○

Edited, Printed & Published by M. P. Sivagnanam at the
Kannagi Achagam 1-29, Irusappa Gramani Street,
Triplicne, MADRAS-5.

தங்க நகைகள்



கே. ஆர் & சன்ஸ்

பெரியகடை வீதி, கோயமுத்தூர்